மேற்படி திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (மதிப்பீட்டை விட 0.01%) வழங்கிய Thiru. R.Rajaram, Perambalur என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru. R.Rajaram, Perambalur என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருதி, ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 0133 / 2025 / இ1)**

## பொருள் எண் : 26

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம்** 2025-2026-ஆம் ஆண்டின் கீழ், கள்ளக்குறிச்சி ஏமப்பேர் கிராமம், சர்வே எண். 63, 64/2A, 2B, 3A, 3B, 4B, 4A, 5A, 5B, 65/1A, 70/9, 70/10, 70/11, 73/1, 73/2, 73/3, 73/8, 73/9, 73/10 மற்றும் 73/11-ல் ரூ.1621.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள அரசாணை (4D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS& FC) துறை, நாள். 19.05.2025-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, கள்ளக்குறிச்சி நகராட்சி புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள இடம் அருகில் அமைக்கப்பட்டு வரும் புறவழி சாலைக்கும் சுமார் 2 மீட்டர் அளவீல் மிகவும் தாழ்வாக உள்ளது. இவ்வாறு உள்ள நிலையில் மழை காலங்களில் சாலை அருகில் உருவாகும் மழைநீர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள பகுதியில் தேங்கி பாதிப்பை ஏற்படுத்தும் என்பதோடு, எதிர்காலங்களில் சாலை மீள அமைக்கும் போது புறநகர் பேருந்து நிலையம் மேலும், தாழ்வான பகுதியாக ஏற்படும் என்பதால் மேற்படி புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள இடத்தில் சுமார் 2 மீட்டர் உயரத்திற்கு மண் நிரப்பி சமன்படுத்தும் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசிய தேவையாக உள்ளது.

எனவே, மேற்படி புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள பகுதியின் தெற்கு பகுதியில் இருந்து கிழக்கு பகுதியில் மண் நிரப்பும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.33,00,000/-(ரூபாய் முப்பத்தி மூன்று இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி மூலம் சேமிப்பில் உள்ள வளர்ச்சி கட்டண நிதியினை பயன்படுத்திக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்ற பின்னர் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி மூலம் குறுகிய கால வைப்புத்தொகையாக சேமிப்பில் உள்ள வளர்ச்சி கட்டண நிதியினை பயன்படுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்ற பின்னர் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 0922 /2025 / இ1)**

**பொருள் எண் : 27**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025–2026–ஆம்** ஆண்டில், கீழ்க்காணும் பணியினை மேற்கொள்வதற்கு அரசாணை (4D) எண். 24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை, நாள். 19.05.2025–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதனடிப்படையில் கீழ்காணும் பணியை மேற்கொள்ள மின்னனு (E–Tendering) முறையில் 12.06.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி ஏமப்பேர் கிராமம், சர்வே எண். 63, 64/2A, 2B, 3A, 3B, 4B, 4A, 5A, 5B, 65/1A, 70/9, 70/10, 70/11, 73/1, 73/2, 73/3, 73/8, 73/9, 73/10 மற்றும் 73/11–ல் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல் பணி | ரூ. 1621.00 (இலட்சம்) | M/s M–Arc Constructions Hosur– 635 109. | 3.81 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | Thiru G.Ilangumaran. Madurai. | 9.01% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்படி திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டை விட கூடுதல் விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளதால், மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களில், குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் (மதிப்பீட்டை விட 3.81% அதிகம்) வழங்கி M/s M–Arc Constructions, Hosur என்ற நிறுவனத்தாரை விலை குறைப்பு செய்து தர கோரப்பட்டதில், அதனை ஏற்று 20.06.2025 ஆம் தேதிய கடிதத்தின் மூலம் M/s. M–Arc Constructions, Hosur என்ற நிறுவனத்தார் மேற்படி பணிக்கு வழங்கிய ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.01% குறைவான விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள சம்மத கடிதம் வழங்கியதை ஏற்று, ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி (விலைகுறைப்பு சம்மத கடிதம்) அளித்துள்ள M/s. M–Arc Constructions, Hosur என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருதி, ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 070 / 2025 / இ1)**

பொருள் எண் : 28

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025–2026–ஆம்** ஆண்டின் கீழ், கள்ளக்குறிச்சி ஏமப்பேர் கிராமம், சர்வே எண். 63, 64/2A, 2B, 3A, 3B, 4B, 4A, 5A, 5B, 65/1A, 70/9, 70/10, 70/11, 73/1, 73/2, 73/3, 73/8, 73/9, 73/10 மற்றும் 73/11–ல் ரூ.1621.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள அரசாணை (4D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS& FC) துறை, நாள். 19.05.2025–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, கள்ளக்குறிச்சி நகராட்சி புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள இடம் அருகில் அமைக்கப்பட்டு வரும் புறவழி சாலைக்கும் சுமார் 2 மீட்டர் அளவீல் மிகவும் தாழ்வாக உள்ளது. இவ்வாறு உள்ள நிலையில் மழை காலங்களில் சாலை அருகில் உருவாகும் மழைநீர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள பகுதியில் தேங்கி பாதிப்பை ஏற்படுத்தும் என்பதோடு, எதிர்காலங்களில் சாலை மீள அமைக்கும் போது புறநகர் பேருந்து நிலையம் மேலும், தாழ்வான பகுதியாக ஏற்படும் என்பதால் மேற்படி புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள இடத்தில் சுமார் 2 மீட்டர் உயரத்திற்கு மண் நிரப்பி சமன்படுத்தும் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசிய தேவையாக உள்ளது.

எனவே, மேற்படி புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள பகுதியின் தெற்கு பகுதியில் இருந்து மேற்கு பகுதியில் மண் நிரப்பும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.40,00,000/– (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி மூலம் சேமிப்பில் உள்ள வளர்ச்சி கட்டண நிதியினை பயன்படுத்திக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்ற பின்னர் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி மூலம் குறுகிய கால வைப்புத்தொகையாக சேமிப்பில் உள்ள வளர்ச்சி கட்டண நிதியினை பயன்படுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்ற பின்னர் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 0923 /2025 / இ1)**

**பொருள் எண் : 29**

நகராட்சி நிர்வாக இயக்குர், அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.35599/2023/எம்ஏ1, நாள்.23.02.2024-ல் நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி பிற அலுவலர்கள் ஆகியோர் அலுவலக பயன்பாட்டிற்கு வாகனங்கள் கொள்முதல் செய்யவும், வாகனங்களை பயன்படுத்தும் தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் சுற்றறிக்கையில் தேர்வு நிலை நகராட்சி நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோருக்கு ஸ்கார்பியோ வாகனமும், நகராட்சி பொறியாளர் மற்றும் பிற அலுவலர்களுக்கு பொலிரோ வாகனம் கொள்முதல் செய்து பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி தேர்வு நிலை நகராட்சியில் அனுமதிக்கப்பட்டுள்ள நான்கு எண்ணிக்கை வாகனங்களில் நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகிய அலுவலர்களுக்கு மூன்று வாகனங்கள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. பிற அலுவலர்களின் பயன்பாட்டிற்கு எவ்வித ஈப்பு வாகனமும் இல்லாத காரணத்தால் தற்போது நகராட்சி ஆணையாளர் அலுவலக பயன்பாட்டில் உள்ள TN 15 MC 3926 என்ற பொலிரோ ஈப்பு வாகனத்தை பிற அலுவலர்களின் பயன்பாட்டிற்கு வழங்கிவிட்டு ஆணையாளர் அலுவலக பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட ஸ்கார்பியோ வாகனம் ஒன்று புதியதாக கொள்முதல் செய்ய ஏற்படும் தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 0787 / 2025 / இ1)**

**பொருள் எண் : 30**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026**-ஆம் ஆண்டின் கீழ், கள்ளக்குறிச்சி ஏமப்பேர் கிராமம், சர்வே எண். 63, 64/2A, 2B, 3A, 3B, 4B, 4A, 5A, 5B, 65/1A, 70/9, 70/10, 70/11, 73/1, 73/2, 73/3, 73/8, 73/9, 73/10 மற்றும் 73/11-ல் ரூ.1621.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள அரசாணை (4D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS& FC) துறை, நாள். 19.05.2025-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, கள்ளக்குறிச்சி நகராட்சி புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள இடம் அருகில் அமைக்கப்பட்டு வரும் புறவழி சாலைக்கும் சுமார் 2 மீட்டர் அளவீல் மிகவும் தாழ்வாக உள்ளது. இவ்வாறு உள்ள நிலையில் மழை காலங்களில் சாலை அருகில் உருவாகும் மழைநீர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள பகுதியில் தேங்கி பாதிப்பை ஏற்படுத்தும் என்பதோடு, எதிர்காலங்களில் சாலை மீள அமைக்கும் போது புறநகர் பேருந்து நிலையம் மேலும், தாழ்வான பகுதியாக ஏற்படும் என்பதால் மேற்படி புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள இடத்தில் சுமார் 2 மீட்டர் உயரத்திற்கு மண் நிரப்பி சமன்படுத்தும் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசிய தேவையாக உள்ளது.

எனவே, மேற்படி புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உள்ள பகுதியின் மேற்கு பகுதியில் இருந்து வடக்கு பகுதியில் மண் நிரப்பும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.37,00,000/-(ரூபாய் முப்பத்தி ஏழு இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி மூலம் சேமிப்பில் உள்ள வளர்ச்சி கட்டண நிதியினை பயன்படுத்திக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்ற பின்னர் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி மூலம் குறுகிய கால வைப்புத்தொகையாக சேமிப்பில் உள்ள வளர்ச்சி கட்டண நிதியினை பயன்படுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்ற பின்னர் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 0924 /2025 / இ1)**

## பொருள் எண் : 31

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026ன் கீழ் அரசாணை (4D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS& FC) துறை, நாள். 19.05.2025-ல் புதிய புறநகர் பேருந்து நிலையம், புதிய தினசரி நாளங்காடி மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ஆகிய பணிகள் ரூ.47.11 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி, மூன்று பணிகளை மேற்கொள்ள பணிகளை துவங்கும் விதம் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்கள் தலைமையில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர், அவர்கள் அடிக்கல் நாட்டு விழா கடந்த 28.05.2025ஆம் தேதி நடைப்பெற்றது.

இவ்விழாவை சிறப்பாக கொண்டாட ஏதுவாக விழா அழைப்பிதழ் அச்சடித்தல், LED திரை அமைத்தல், போட்டோ மற்றும் வீடியோ கவரேஜ் செய்தல் மற்றும் இதர முன்னேற்பாடு வசதிகள் செய்யும் பணிகள் நகராட்சி வருவாய் நிதி 2025-2026ன் கீழ், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ், பணிகள் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல், புதிய தினசரி நாளங்காடி அமைத்தல் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ஆகிய பணிகள் ரூ.47.11 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அடிக்கல் நாட்டு விழாவிற்கு முன்னேற்பாடுகள் செய்தல் பணி | ரூ.2,45,000/- |

மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை ஒப்படைப்பு பணியாக M/s Star Friends Advertisment, Thiyagadurugam என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி விழாவிற்கு முன்னேற்பாடு பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொண்டதற்கு வரப்பெறும் பட்டில் படி செலவுத் தொகையை M/s Star Friends Advertisment, Thiyagadurugam என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி, மூன்று திட்டப்பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு தேவையான முன்னேற்பாடு பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2025 / இ1)**

**பொருள் எண் :** 32

## கசடுகழிவு மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்)2024.

## கசடுகழிவு மேலாண்மை துணை விதிகள்,

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இன் அத்தியாயம் X–A, பிரிவு 199, அத்தியாயம் XI ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கள்ளக்குறிச்சி நகராட்சி மன்ற அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பறைகள் மற்றும் நச்சு தொட்டிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை ஒழுங்குபடுத்துவதற்காக பின்வரும் துணை விதிகளை உருவாக்குகிறது.

இந்த துணை விதிகள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் அத்தியாயம் XI– பகுதி IV, " 2019 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்", அவ்வப்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் பிற தொடர்புடைய விதிகள் மற்றும் உத்தரவுகளுடன் சேர்த்துப் படிக்கப்பட வேண்டும்.

**1. சுருக்கமான தலைப்பு, தொடக்கம் மற்றும் பொருந்தக்கூடிய தன்மை**

i. இந்த துணை விதிகள் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கான கசடுகழிவு மேலாண்மை துணைவிதிகள் என்று அழைக்கப்படும்.

ii. இந்த துணை விதிகள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் அரசிதழில் அறிவிக்கப்பட்டு வெளியிடப்பட்ட அல்லது குறிப்பாக அறிவிக்கப்படும் பிற தேதியில் நடைமுறைக்கு வரும்.

iii. இந்த துணை விதிகள் அமலுக்கு வந்ததும், குடியிருப்பு, வணிக நிறுவன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டாலும், கள்ளக்குறிச்சி நகராட்சியின் அதிகார வரம்பில் அமைந்துள்ள குளியலறைகள், கழுவும் பகுதிகள், கழிப்பறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கொண்ட அனைத்து கட்டிடங்களுக்கும் பொருந்தும்.

**2. வரையறைகள்**

இந்த உப விதிகள் பத்தியிலுள்ள மேலும் தேவைப்படுகின்ற இனங்கள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றிக்கிற்கான பொருள்கள் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன:

1. "**மேல்முறையீட்டு அமைப்பு**" என்பது அவ்வப்போது அறிவிக்கப்படும், நகர சுகாதாரக் குழு அல்லது வேறு ஏதேனும் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பைக் குறிக்கும், மேலும் இந்த அமைப்பானது துணை விதிகள் தொடர்பான எந்தவொரு தகராறு, மேல்முறையீடு அல்லது சிக்கலைத் தீர்ப்பதற்குப் பொறுப்பாகும்.
2. "**அதிகாரம்**" என்பது அவ்வப்போது இந்த துணை விதிகளை செயல்படுத்துவதற்காக அறிவிக்கும் நகராட்சியை குறிக்கும்.

3. "**இணை சுத்திகரிப்பு**" என்பது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP), கழிவுநீர் குழாய்கள் வழியாக கொண்டு செல்லப்படும் வீட்டு கழிவுநீரை சுத்திகரிப்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு இடத்திலுள்ள சுகாதார அமைப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கசடு மற்றும் கழிவுநீரையும் சுத்திகரிக்கும் செயல்முறையைக் குறிக்கும்.
4. "**கழிவுநீர் வெளியேற்றும் கட்டணம்**" என்பது கழிவுநீரை அகற்றும் வசதிக்கு ஒவ்வொரு முறையும் கழிவுநீர் அகற்றும் வாகனம் வருகை தரும்போது, சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள நகராட்சிக்கு கழிவுநீர் அகற்றும் வாகனம் இயக்குபவர் செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்கும்.
5. "**கழிவு நீக்கம்**" என்பது நிகழ்விட சுகாதார அமைப்புகளிலிருந்து கசடு மற்றும் கழிவுநீரை அகற்ற உரிமம் பெற்றுஇயக்குபவர்களின் செயல்பாட்டைக் குறிக்கிறது.
6. "**அகற்றுதல்**" என்பது அவ்வப்போது அறிவிக்கப்படும் குறிப்பிட்ட இடங்களுக்கு கசடு மற்றும் கழிவுநீரை கொண்டு சென்று வெளியேற்றுவதைக்குறிக்கும்.
7. "**கசடுகழிவு** " என்பது செரிமானமாகாத அல்லது பகுதியளவு செரிமானமான, அரைநீர்ம அல்லது அரை திண்மமாகவோ, கழிவுகள் மற்றும் கழிவறை கழிவுநீர் (black water), இதர கழிவு நீருடன் (grey water)" அல்லது இல்லாமல் சேகரித்தல், சேமித்தல் அல்லது சுத்திகரிப்பு செய்வதைக் குறிக்கும். இது குழி கழிப்பறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகளின் திடமான அல்லது தேங்கிய கழிவுகளின் உள்ளடக்கமாகும்.
8. "**கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம்** (FSTP)" என்பது ஒரு தற்சார்பான திட மற்றும் திரவ கூறுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கும், சுத்திகரிப்பதற்கும், மறுபயன்பாட்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளை அடைய உருவாக்கப்பட்ட கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம்.
9. "**இதர கழிவுநீர் (grey water)**" என்பது மனித கழிவு இல்லாத வீட்டு கழிவு நீரைக் குறிக்கும். அது வீடு சுத்தம் செய்தல், சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்து வரும் தண்ணீராக இருக்கலாம்.
10. **சுத்திகரிப்பு நிலைய வசதி வழங்கும் உள்ளாட்சி** அமைப்பு என்பது சுத்திகரிப்பு வசதியின் செயல்பாடு மற்றும் பராமரிப்பிற்குச் சொந்தமான மற்றும் பொறுப்பான கள்ளக்குறிச்சி நகராட்சியினை குறிக்கும்.
11. "**சுகாதாரமற்ற கழிப்பறை**" என்பது செரித்த மலக்கழிவினை நேரடியாக அகற்றுதல், விலங்குகளால் அகற்றுதல் அல்லது மலக்கழிவினை திறந்த வடிகால் அல்லது குழியில் அப்புறப்படுத்துதல், கழிவு முழுமையாக சிதைவடைவதற்கு முன்பு கழிவுகள் வெளியேற்றப்படும் கழிப்பறைகளைக் குறிக்கும்.
12. "**உரிமம்**" என்பது உள்ளாட்சி அமைப்பு அல்லது உள்ளாட்சி அமைப்பு குழுமத்திற்குள், கசடுகழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு சென்று வெளியேற்றுதல் போன்ற சேவைகளை மேற்கொள்ள இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் உள்ளாட்சி அமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்திடுபவரின் எழுத்துப்பூர்வ அனுமதியைக் குறிக்கும்.
13. "**உரிமக் கட்டணம்**" என்பது உள்ளாட்சி அமைப்பு அல்லது உள்ளாட்சி அமைப்பு குழுமத்திற்குள் செயல்பட உரிமம் பெறுவதற்கு இயக்குபவர்கள் செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்கும்.

14. "**உரிமம் பெற்றவர்**" என்பது, கசடுகழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு சென்று வெளியேற்றுவதற்கு தொடர்புடைய அதிகாரியால் உரிமம் வழங்கப்பட்ட எந்தவொரு நபர் அல்லது நிறுவனம் அல்லது சுய உதவிக்குழு அல்லது சங்கம் அல்லது தனியார் நிறுவனத்தைக் குறிக்கும்.
15. "**உள்ளாட்சி அமைப்பு**" என்பது கள்ளக்குறிச்சி நகராட்சியினை குறிக்கும்.
16. "**குழும உள்ளாட்சி அமைப்பு**" என்பது மாநில அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் கள்ளக்குறிச்சி நகராட்சி விதிகளின்படி கசடு சுத்திகரிப்பு நிலையம் அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஒன்றாகப் பயன்படுத்தும் பிற உள்ளாட்சி அமைப்புகளைக் குறிக்கிறது.
17. "**குடியிருப்போர்** " என்பது கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தினிலோ அல்லது அதன் ஒரு பகுதிகளிலோ குடியிருக்கும் நபரை குறிக்கும்.
18. "**நிகழ்விடசுகாதார அமைப்பு(OSS)** " என்பது, கழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து, சேமித்து, சுத்திகரித்து, உற்பத்தியாகும் இடத்தில் அல்லது அதற்கு அருகில் அகற்றும் ஒரு அமைப்பைக் குறிக்கிறது.
19. "**இயக்குதல் மற்றும் பராமரிப்பு**" (O&M) என்பது கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அல்லது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்பைக் குறிக்கும், மேலும் அத்தகைய செயல்பாடுகள், சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கியது.
20. "**இயக்குபவர்**" என்பது கசடு கழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் போன்ற சேவைகளை மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு தனிநபர்/ சுய உதவிக்குழு/ சங்கம்/ தனியார் நிறுவனத்தைக் குறிக்கும்.
21. "**உரிமையாளர்**" என்பது கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ சொந்தமாக வைத்திருப்பவரை உள்ளடக்கும்.
22. "**சுகாதாரக் கழிப்பறை**" என்பது நச்சு தொட்டி அல்லது நிகழ்விட சுகாதார அமைப்புகள் அல்லது பாதாள சாக்கடை அமைப்புடன் இணைக்கப்பட்ட கழிப்பறை மற்றும் சிறுநீர் பிறை வளாகத்தை குறிக்கும், இது மனித கழிவுகளை (செரிக்கப்படாத கழிவுகள்) பாதுகாப்பாக அடைத்து அகற்றுவதை உறுதி செய்கிறது, இவை ஒவ்வொன்றும் உள்ளாட்சி அமைப்பால் வழங்கப்பட்ட வடிவமைப்பு (design) விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி கட்டப்பட வேண்டும்.
23. "**கசடு கழிவு**" என்பது ஒரு நச்சு தொட்டி,சேகரிப்பு தொட்டி அல்லது நிகழ்விட சுகாதார அமைப்பில் உள்ள திரவ மற்றும் திடப்பொருளைக் குறிக்கிறது.
24. "**நச்சு தொட்டி**" என்பது திடப்பொருட்கள் படிதல் மற்றும் காற்றில்லா செரிமானம் ஆகியவற்றின் கலவையின் மூலம் கழிவுநீரை சுத்திகரிக்கும் ஒரு நிலத்தடி தொட்டியைக் குறிக்கும். நச்சு தொட்டி, வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் தேசிய கட்டிடக் குறியீட்டின் தேவைகளுக்கு இணங்க அமைக்கப்பட வேண்டும். மேலும் 02.01.2023 தேதியிட்ட கசடு கழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்;1 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) – ன் படி இருக்க வேண்டும்.

25. "**கழிவுநீர்**" என்பது கழிவறை கழிவுநீர் (black water) மற்றும் இதர கழிவுநீரின் (grey water) கலவையைக் குறிக்கும், இது சாக்கடைகள் வழியாக கொண்டு செல்லப்படுகிறது. இது கழிவுநீர் அல்லது பயன்படுத்தப்பட்ட நீர் என்றும் அழைக்கப்படுகிறது.
26. "**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**" (STPs) என்பது பாதுகாப்பான முறையில் சுத்திகரித்து அகற்றுவதற்கும், மறுபயன்பாட்டிற்கும் பரிந்துரைக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப கழிவுநீர் சுத்திகரிக்கப்படும் இடத்தைக் குறிக்கும்.
27. "**கழிவுநீர்க்குழாய்கள்**" என்பது பொதுமக்கள் வெளியேற்றும் கழிவுநீரை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் குழாய்களை குறிக்கும்.
28. "**குறிப்பிடப்பட்ட வாகனம்**" என்பது கழிவுநீர் தொட்டிகளில் இருந்து கழிவுநீர் மற்றும் கழிவுநீரை வெளியேற்றி கொண்டு செல்வதற்கு உள்ளாட்சி அமைப்பால் அவ்வப்போது அங்கீகரிக்கப்படும் வடிவமைப்பு விவரக்குறிப்புகள் கொண்ட, உள்ளாட்சி அமைப்பில் இயக்குபவர்களுக்கு சொந்தமான மோட்டார் பொருத்தப்பட்ட பம்புகள் மற்றும் சேமிப்பு தொட்டியுடன் கூடிய உறிஞ்சு வாகனங்களைக் குறிக்கும்.
29. "**சுத்திகரிப்பு வசதி**" என்பது அவ்வப்போது ஆணையத்தால் அறிவிக்கப்படும் இணைசுத்திகரிப்பு செய்யும் கசடு கழிவு நீர் (FSTP) மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்(STP) உட்பட, மலக் கசடு மற்றும் கசடு கழிவுகளை சுத்திகரித்து அகற்றும் வடிவமைப்பு விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கொண்ட ஒரு சுத்திகரிப்பு நிலையத்தைக் குறிக்கும்.
30. "**தூய்மை பணியாளர்கள்**" என்பது கசடு கழிவு மற்றும் கழிவுநீரை அப்புறப்படுத்துதல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றில் ஈடுபடும் உரிமைதாரரால் நியமிக்கப்படும் எந்தவொரு நபரையும் குறிக்கும்.

**3. உரிமையாளர் அல்லது குடியிருப்போரினால் செயல்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் உடன்பாடுகள்:**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு முழு கட்டிடம் அல்லது அதன் பகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர் இந்த துணைவிதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து பின்வரும் கடமைகளைச் செய்ய பொறுப்பாகிறார்:

1. தமிழ்நாடு அரசு தனது அதிகார வரம்பிற்குள் சுகாதாரமற்ற கழிப்பறைகள் இல்லை என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதற்கு இணங்கவும், மனிதர்களைக் கொண்டு வேலை செய்வதை தடுக்கவும் மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013, மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 ஆகியவற்றின் விதிகளின்படியும், சுகாதாரமற்ற கழிப்பறைகளைகட்டுவதும் பயன்படுத்துவதும் கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. நகராட்சி எல்லைக்குள் உள்ள எந்தவொரு வளாகத்தின் உரிமையாளரோ அல்லது குடியிருப்பாளரோ எந்தவொரு சுகாதாரமற்ற கழிப்பறையையும் கட்டவோ அல்லது இயக்கவோ கூடாது, இதில் கசடு கழிவுகளை நேரடியாக திறந்த வடிகால், திறந்த நிலங்கள் அல்லது நீர்நிலைகளில் வெளியேற்றும் இடங்கள் அடங்கும். தற்போதுள்ள ஒவ்வொரு சுகாதாரமற்ற கழிப்பறையும் கண்டறியப்பட்டால்,அதிகார அமைப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள், பொருந்தக்கூடிய வகையில், உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் செலவில் இடிக்கப்பட வேண்டும் அல்லது சுகாதார கழிப்பறையாக மாற்றப்பட வேண்டும். மேலும், மனித கழிவினை கையால் அகற்றுவதற்காக அல்லது சுகாதாரமற்ற கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்காக யாரையாவது பணியமர்த்துவது சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். மீறினால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179–F மற்றும் மனிதர்களைக்கொண்டு வேலை செய்வதை தடுக்கவும், அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013, இன் விதிகளின்படி, வழக்குத் தொடருதல் மற்றும் அபராதம் உள்ளிட்ட தண்டனை நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.

2. கசடு கழிவுகள் மற்றும் கழிவுகள் சுற்றியுள்ள பகுதிகளை நிரம்பி வழியாமல் அல்லது மாசுபடுத்தாமல் இருப்பதை உறுதிசெய்ய, தேசிய கட்டிடக் குறியீட்டின்படியும், கழிவு நீர் மேலாண்மை விதிமுறை மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்;1 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) விதிகளின்படியும் கழிவு நீர் தொட்டிகள் அமைந்துள்ளன, வடிவமைக்கப்பட்டுள்ளன, கட்டப்பட்டுள்ளன மற்றும் பராமரிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்யவும்.
3. 1939 ஆம் ஆண்டு பொது சுகாதாரச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின்படி, முன் அறிவிப்புடன், குறிப்பிட்ட நேரங்களில் ஆய்வு செய்ய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளை அனுமதிக்கவும்.
4. நச்சு தொட்டி, கழிவுநீர் தொட்டி அல்லது அதுபோன்ற நிகழ்விட சுகாதார அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப அல்லது நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்டகால இடைவெளியில் கழிவு நீர் வெளியேற்றும் பணியினை மேற்கொள்ளுதல்.
5. தங்கள் கட்டிடத்திலிருந்து கசடு கழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து கொண்டு செல்வதற்கு உரிமம் பெற்ற இயக்குபவர்களை மட்டுமே ஈடுபடுத்துதல்.
6. போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் உரிமம் பெற்ற இயக்குபவர்களால் கழிவுநீர் தொட்டிகள் இயந்திரத்தின் மூலம் சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்யவும்.

**4. நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் துணை விதிகளை அமல்படுத்துதல்**

இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து, அதிகாரம் அல்லது சுத்திகரிப்பு நிலைய வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்புகள், பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள உரிமை உள்ளது:

1. நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்களின் கணக்கெடுப்பு மற்றும் ஆய்வை மேற்கொண்டு, இந்த துணை விதிகளுக்கு இணங்கும் கட்டிடங்களுக்கு இணக்கச் சான்றிதழை வழங்குதல்.
2. இந்த துணை விதிகளுக்கு இணங்காத கட்டிடங்களின் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்போர்களுக்கு அறிவிப்புகளை வழங்குதல்.
3. அதிகார வரம்புகளுக்குள் உள்ள கட்டிடங்களின் நச்சுத் தொட்டிகள், கழிவுநீர் தொட்டி அல்லது அதுபோன்ற சுத்திகரிப்பு வசதிகளின் விபர பட்டியல் பராமரிக்கப்பட வேண்டும்.
4. துணை விதிகளை செயல்படுத்துதலை மேற்பார்வை செய்தல்.
5. சுத்திகரிக்கப்படாத கசடுகழிவு மற்றும் கசடுகழிவுகளை திறந்த வெளியில் வெளியேற்றுவதைத் தடுப்பது, கூட்டு சுத்திகரிப்பு மற்றும் கசடுகழிவுமேலாண்மை குறித்துபொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்களை நடத்துதல்.
6. இயக்குபவர்கள் உட்பட அவர்களின் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது, அங்கு அவர்களுக்கு கசடு மற்றும் கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றுவதற்கு சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
7. குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் அதிகார வரம்பிற்குள் செயல்படும் உரிமதாரர்களுக்கு, சுத்திகரிப்பு வசதியின் செயல்பாட்டு நேரம், அகற்றும் செயல்முறை, வெளியேற்ற கட்டணம் மற்றும் குறிப்பிட்ட நேரங்களில் செல்ல வேண்டிய வழிகளை தெரிவிக்கவேண்டும்.

8. உரிமதாரர்களை நேரடியாக மேற்பார்வை செய்தல் மற்றும் உரிமம் பெற்ற இயக்குபவர்களின் பெயர்களை வெளியிடுதல், உரிமதாரர்களின் விதிமீறல்களைப் புகாரளிப்பதற்கான பொது புகார்/குறை தீர்க்கும் வழிமுறையின் விவரங்களைக் குறிப்பிட்டு பொதுமக்களுக்குத் தெரிவித்தல்.
9. சுத்திகரிப்பு நிலையத்தில் கசடுகழிவு மற்றும் கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுவதை நேரடியாக ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
10. குறிப்பிட்ட வாகனங்களின் தரம் மற்றும் பராமரிப்பை ஆய்வு செய்து ஒழுங்குபடுத்துதல்.
11. சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும் கசடுகழிவின் தரத்தை ஆய்வு செய்தல்.
12. குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் அதிகார வரம்பிற்குள் செயல்படும் இயக்குபவர்களிடமிருந்து கசடு கழிவுநீரை நேரடியாக அகற்றுவதை அனுமதிக்கவும் அல்லது உறுதி செய்யவும், தேவைப்பட்டால் கூட்டு சுத்திகரிப்பு வசதியை ஏற்படுத்துதல்.
13. இந்த துணைச் விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், கசடுகழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்; 1 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) இணைப்பு 12 (A & B) நாள் 2.1.2023 இன் படி, கசடு கழிவு சுத்திகரிப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, செயல்படுத்தவும். குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்புடன், சுத்திகரிப்பு நிலையத்தில் அகற்ற ஏதுவாக, கிராமப்பஞ்சாயத்துகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்பாட்டு நிதி மற்றும் கட்டுப்பாட்டுப் பொறுப்புகளை ஏறுபடுத்துதல் கழிவு அகற்றுதல், இயக்குதல் மற்றும் பராமரிப்புக் கட்டணம் செலுத்துதல், இயக்குநர் உரிமக்கான விதிமுறைகள் மற்றும் பயனுள்ள, பொறுப்பான FSM சேவைகளை வழங்குவதற்கு ஒழுங்கு கண்காணிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரிவுகளை உட்படுத்துகிறது.
14. கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான கட்டணத்தை நகராட்சியின் மக்கள்தொகைக்கு ஏற்பவும், இந்த துணைச் விதிகளின் இணைப்பு 'அ' இல் உள்ள கணக்கீட்டின் படியும், பொருந்தக்கூடிய வகையில் செலுத்துதல்.
15. அந்தந்த அதிகார வரம்பிற்குள் செயல்படும் இயக்குபவர்கள், செல்லுபடியாகும் கழிவு நீர் அகற்றும் உரிமத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்யவும்.
16. இந்த துணைச் விதிகளை மீறுவதாகக் கண்டறியப்பட்ட உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அல்லது இயக்குபவர்கள் அல்லது உரிமதாரர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு அபராதம் விதிக்கவும்.

இந்த விதிமுறைகளின் நிர்வாகம் மற்றும் அமலாக்க அதிகாரங்கள், நகராட்சி ஆணையரால் அல்லது ஆணையரால் நியமிக்கப்பட்ட அலுவலர்களிடம் உள்ளன.

5. **இயக்குபவர்கள்/ உரிமதாரர்கள் நியமனம் மற்றும் செயல்பாடு.**

1. இந்த துணைச் விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்டகாலத்திற்குள், கள்ளக்குறிச்சி நகராட்சி கழிவுநீர் அகற்றும் சேவைகளை வழங்க ஆர்வமுள்ள இயக்குபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிப்பு ஆணையர் அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு வெளியிட வேண்டும். அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பொருந்தும்.
2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 374 (e) இன் படி இயக்குபவர்கள் சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்து, உரிமக் கட்டணமாக ரூ. 2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும் கட்டணத்தை செலுத்த வேண்டும்.
3. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பிறகு, வரையறுக்கப்பட்ட உரிம அளவுகோல்களைப் பூர்த்தி செய்யும் இயக்குபவர்களுக்கு, இந்த துணை விதிகளின் இணைப்பு 'ஆ'–இல் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி, வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் உரிமம் வழங்கப்படும்.
4. செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் செயல்படும் உரிமதாரர்கள் இந்த துணை விதிகளை மீறுவதாகக் கருதப்படுவார்கள்.
5. ஆணையரால் அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பினரால் அவ்வப்போது வெளியிடும் வழிகாட்டுதல்களின்படி. உரிமதாரர்கள் நகராட்சியின் குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றைப் பராமரித்து இயக்குவதற்கு பொறுப்பாவார்கள்.
6. சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் ஆணையரால் அவ்வப்போது வழங்கப்படும் வழிமுறையின்படி உரிமம் பெற்றவர்கள், நகராட்சிக்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்களில், கட்டிடங்களிலிருந்து பெறப்படும் கசடு கழிவுகளை பாதுகாப்பாக சேகரித்து கொண்டு செல்வதற்கு பொறுப்பாவார்கள்.
7. கழிவுநீர் சேகரிப்பு இடத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும்போது, கழிவுநீர் கசிவு ஏற்படாமல் உரிமதாரர் உறுதி செய்ய வேண்டும். கழிவுநீர் தற்செயலாகக் கசிந்தால், உரிமதாரர் உடனடியாக கழிவுநீர்க் கசிவைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், கசிவு ஏற்பட்ட இடங்களிலிருந்து உடனடியாக அனைத்து கழிவுநீர்க் கசிவுகளையும் அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விபத்து நடந்த குழும உள்ளாட்சி அமைப்பு அருகிலுள்ள நகராட்சிக்கு, கசிவு குறித்தும், நிகழ்வு நடந்த 24 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் உரிமதாரர் தெரிவிக்க வேண்டும்.
8. உரிமதாரர்கள் உரிமத்தை நிர்வகிக்கும் விதிகளுக்கு இணங்க வேண்டும்.
9. உரிமம் பெற்றவர்கள் அல்லது நகராட்சிக்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்கள் எந்தவொரு வகையான தொழிற்சாலை கழிவுகளையோ அல்லது தொழிற்சாலை கழிவுகளுடன் கலந்த இயற்கை கழிவுகளையோ கொண்டு செல்லக்கூடாது.
10. உரிமதாரர்கள் அனைத்து உள்ளூர் சட்டங்களுக்கும் இணங்க வேண்டும், மேலும் உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அதன் செயல்பாடுகளின் செயல்திறனுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒப்புதல்களையும் பராமரிக்க வேண்டும்.

11. உரிமதாரர்கள் அல்லது நகராட்சியில் பயிற்சி பெற்ற துப்புரவுப் பணியாளர்களை மட்டுமே பணியமர்த்த வேண்டும். கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்து கொண்டு செல்லும் போது, அத்தகைய துப்புரவுப் பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் வழங்க வேண்டும்.
12. சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி ஆணையரால் அவ்வப்போது அறிவிக்கப்படும் செயல்திறன் தரநிலைகளின்படி செய்யப்படுவதை உறுதிசெய்ய, உரிமம் பெற்றவர்கள் போதுமான எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களை, கசடுகழிவு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு போக்குவரத்திற்கு பணியமர்த்த வேண்டும்.
13. உரிமதாரர்கள் அல்லது நகராட்சியால், மனிதர்களைக்கொண்டு வேலை செய்வதை தடுக்கவும் மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013ன் கீழ் உள்ள விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.
14. விபத்து ஏற்படும் போது, உரிமதாரர்கள் கள்ளக்குறிச்சி நகராட்சியால் அறிவுறுத்தப்பட்ட அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
15. சுத்திகரிப்பு நிலையத்தில், கசடுகழிவு மற்றும் கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றுவதற்கு, உரிமம் பெற்றவர்கள் மற்றும் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் பொறுப்பாவார்கள்.
16. சுத்திகரிப்பு நிலையத்தில் கசடுகழிவு மற்றும் கழிவுநீரை அகற்றுவதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 376 இன் பிரகாரம், உரிமதாரர்கள் 6000 லிட்டருக்கு மிகாமல் கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கு ரூ.200 மற்றும் 6,000 லிட்டருக்கு மேல் கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கு ரூ.300 வெளியேற்று கட்டணமாக செலுத்த வேண்டும்.

**6. துணை விதிகளை மீறுவதற்கான அபராதங்கள்.**

இந்த துணை விதிகளை மீறினால், அதைக் கவனத்தில் கொண்டு பின்வரும் நடவடிக்கைகள்ஆணையரால் எடுக்கப்படும்.

1. ஒரு குற்றம் நிகழும் பட்சத்தில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவுகள் 179–B முதல் 179–E வரையிலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவுகள் 374 முதல் 378 வரையிலும் பொருந்தக்கூடிய இந்த துணை விதிகளை மீறுவது குறித்து அதிகாரி விசாரணை நடத்தி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் அத்தியாயம் X–Aபிரிவு 179–Fஇன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவுகள் 179–B முதல் 179–E வரையிலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவுகள் 374 முதல் 378 வரையிலும் உள்ளடக்கப்படாத இந்த துணை விதிகளை மீறும் பட்சத்தில், ஒவ்வொரு மீறலுக்கும் ரூ. 5,000 வரை அபராதம் அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற தொகையை விதிக்க நகராட்சி ஆணையருக்கு உரிமை உண்டு.

3. உரிமதாரர் பத்தி 5துணை பத்திகள் (v) முதல் (xvi) வரை மீறினால் அல்லது இந்த துணை விதிகளைத் தொடர்ந்து மீறினால், சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின்ஆணையர் காரணம் கேட்கும் அறிவிப்பை வெளியிடவும் மற்றும் இயக்குபவர்க்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும் உரிமை உண்டு.
4. மேலும், தொடர்ந்து மீறல்கள் ஏற்பட்டால், இந்த துணை விதிகளை மீறுவதை அதிகாரிகள் கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 161, அத்தியாயம் IX மற்றும் 179-G, H. அத்தியாயம் X-A மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 379, அத்தியாயம் XI- பகுதி IV இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. எந்தவொரு உரிமையாளரோ அல்லது குடியிருப்பாளரோ சுகாதாரமற்ற கழிப்பறையைக் கட்டியதாகவோ, இயக்கியதாகவோ அல்லது தொடர்ந்து பயன்படுத்தியதாகவோ கண்டறியப்பட்டால், அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179-F இன் கீழ் தண்டனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள், மேலும் மனிதக்கழிவுகளை கையாளுபவர்களை பணியமர்த்தப்படுவதைத் தடைசெய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டம், 2013 இன் விதிகளின் கீழ் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும், இதில் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி சிறைத்தண்டனை அல்லது அபராதங்கள் விதிக்கப்படும்.

**7. மேல்முறையீடுகள்.**

1. இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நகராட்சி ஒரு மேல்முறையீட்டு அமைப்பை உருவாக்கி தேவையான அறிவிப்புகளை வெளியிடும்.
2. உரிமையாளர், குடியிருப்பாளர் அல்லது இயக்குபவர்கள்/உரிமதாரர்கள், நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட காரணம் கேட்பு அறிவிப்பை எதிர்த்து மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு செய்ய உரிமை உண்டு. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179-1, அத்தியாயம் X-A மற்றும் பிரிவு 380, அத்தியாயம் XI-பகுதி IV, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 இன் பிரிவு 380 ஆகியவற்றின் படி, அத்தகைய காரணம் கேட்பு அறிவிப்பைப் பெற்ற 30 நாட்களுக்குள், அத்தகைய மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.
3. விதி 374 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்துதல் அல்லது ரத்து செய்தல் அல்லது பறிமுதல் உத்தரவு மூலம் உரிமம் வழங்கும் அதிகாரியின் உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் அல்லது சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தைதிரும்ப பெற, அத்தகைய உத்தரவு கிடைத்த நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யலாம்.
4. மேல்முறையீட்டாளருக்கு விசாரிக்க வாய்ப்பு அளித்த பிறகு, மேல்முறையீட்டு அதிகாரி மேல்முறையீட்டின் மீது உத்தரவுகளைப் பிறப்பிப்பார்.
5. அத்தகைய மேல்முறையீட்டு அமைப்பால் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க நகராட்சி ஆணையர், உரிமையாளர் மற்றும் இயக்குபவர்கள்/உரிமதாரர்கள் பொறுப்பாவார்கள்.

**8. பிரச்சனைகளை நீக்குவதற்கான அதிகாரம்**

இந்த துணை விதிகளைச்நடைமுறைபடுத்துவதில் ஏதேனும் இடர்பாடு ஏற்பட்டால்இந்த துணை விதிகளைத் திருத்தம் செய்து, கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் அரசிதழில் வெளியிட வேண்டும்.

**9.பாதுகாப்பு**

இந்த துணை விதிகளில் ஏதேனும் ஒன்று, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 அல்லது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆகியவற்றின் ஏதேனும் விதிகளுக்கு முரணாக இருந்தால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019 அல்லது அவற்றின் அடுத்தடுத்த திருத்தங்கள் இந்த துணை விதிகளை விட மேலோங்கும், அதே நேரத்தில் மற்ற அனைத்து துணை விதிகளும் நடைமுறையில் இருக்கும்.

இணைப்பு 'அ'

கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணைச சட்டங்களுக்கான

கசடு சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு கட்டணம் – சூத்திரம்.

| | | |
|---|---|---|
| சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை **அல்லது** சுத்திகரிப்பு நிலையம் வசதி பெறும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை<br>கள்ளக்குறிச்சி<br>(சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை + சுத்திகரிப்பு நிலையம் வசதி பெறும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை) | X | ஒரு வருடத்திற்கான சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு கட்டணம் |

*நகர்ப்புற–கிராமப்புறக் குழுக்களுக்கு, நச்சுதொட்டிகளைக் கொண்ட வீடுகளுக்கு விகிதாசார மக்கள் தொகை, செலவுப் பகிர்வு சூத்திரத்திற்கான மக்கள்தொகையாகக் கருதப்படுகிறது.

இணைப்பு 'ஆ'

கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணை விதிகளுக்கான

படிவம் 12

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் விதி 374 (1))

கசடு கழிவை சேகரித்தல், ஏற்றிச்செல்லுதல் மற்றும் வெளியேற்றுவதற்கான தனியார் வாகனங்கள்இயக்குபவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான / புதுப்பிப்பதற்கான விண்ணப்ப படிவம்.

| 1. விண்ணப்பதாரர் விவரங்கள் (தனிநபர் / நிறுவனம்/கூட்டாண்மை நிறுவனம்): | | |
|---|---|---|
| 1 | தனிநபர் / நிறுவனத்தின் அனைத்து இயக்குநர்கள் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் பெயர்: | |
| 2 | வயது ஆண்டுகளில்: | |
| 3 | தந்தை/கணவர் பெயர்: | |

| | | |
|---|---|---|
| 4 | விண்ணப்பதாரரின்(களின்) / நிறுவனத்தின் அனைத்து இயக்குநர்களின் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் முகவரிச் சான்று (சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 5 | விண்ணப்பதாரரின்(களின்) / நிறுவனத்தின் அனைத்துஇயக்குநர்களின் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் புகைப்பட அடையாள சான்று (சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்): | |
| 6 | ஜிஎஸ்டி எண்: | |
| 7 | பான் எண்: | |
| 8 | மின்னஞ்சல் அடையாளம்: | |
| 9 | தொடர்பு எண்: | |
| 10 | உரிமத்தின் தன்மை: | புது/புதுப்பித்தல் |
| 11 | புதுப்பித்தல் எனில், தற்போதுள்ள உரிமத்தின் விவரம்: | |
| 12 | கசடு / கசடுகழிவை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றியதற்காக ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா? (ஆம் / இல்லை) | |
| 13 | ஆம் எனில், அத்தகைய வழக்குகளின் விவரங்களை வழங்கவும்: | |
| 14 | ESI மற்றும் EPF பதிவு எண் (பொருந்துமெனில்): | |
| 15 | விவரங்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்): | |

2.ஓட்டுநர் விவரங்கள்:

| வ. எண். | பெயர் | பாலினம் மற்றும் பிறந்த தேதி | ஓட்டுநர் உரிம எண் மற்றும் செல்லுபடியாகும் நாள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | குடியிருப்பு முகவரி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | வருட அனுபவம் மற்றும் இடங்கள் | கைபேசி/ தொடர்பு எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

| | |
|---|---|
| விபத்துக்களின் வரலாறு / பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரங்கள் / சட்டத்திற்கு புறம்பான கசடு / கசடு கழிவை அகற்றலுக்காக பதிவுசெய்யப்பட்ட புகார்கள், ஏதேனுமிருந்தால் | |

| **3.வாகன விவரங்கள்** | | |
|---|---|---|
| வ.எண் | DESCRIPTION | விளக்கம் |
| 1 | வாகன பதிவெண் | |
| 2 | வாகன பதிவு சான்றிதழ் புத்தக எண், செல்லுபடி நிலையுடன் நகல் இணைக்கப்பட வேண்டும் | |
| 3 | உரிமைதன்மை: | |
| 4 | குத்தகைக்கு விடப்பட்டது(குத்தகை ஒப்பந்தத்தின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 5 | வாகன மாதிரி: | |
| 6 | வாகன வகை [நான்கு சக்கர வெற்றிட வாகனம் அல்லது அதற்கு மேல்) (தயவுசெய்து குறிப்பிடவும்)) | |
| 7 | வாகனத் திறன் (லிட்டரில்): | |
| 8 | வாகன உடற்பாக எண்(Chase No): | |
| 9 | எஞ்சின் எண். | |
| 10 | வாகன தகுதி சான்று (FC) செல்லுபடியாகும் காலம் | |
| 11 | அனுமதி செல்லுபடியாகும் காலம் | |
| 12 | எடை (கிலோகிராமில்)<br>(அ) மொத்தம்<br>(ஆ) காலியான நிலையில்<br>(இ) கழிவு ஏற்றப்பட்ட நிலையில் | |
| 13 | காப்பீடு செல்லுபடியாகும் காலம் | |
| 14 | மாசு சான்றிதழ் செல்லுபடியாகும் காலம் | |
| 15 | வேகக் கட்டுப்பாட்டுக் கருவி நிறுவப்பட்டுள்ளதா? (ஆம்/இல்லை): | |
| 16 | ஜிபிஎஸ் நிறுவப்பட்டுள்ளதா (ஆம்/இல்லை) வேலை செய்கிறதா (ஆம்/இல்லை) சேதமடையாத அறை (ஆம்/இல்லை): | |
| 17 | வரி செல்லுபடியாகும் காலம் | |

| | |
|---|---|
| விபத்துக்களின் வரலாறு / பதிவு செய்யப்பட்ட வழக்குகள் சட்டத்திற்கு புறம்பான கசடு / கசடு கழிவை வெளியேற்றுதலுக்காக பதிவு செய்யப்பட்ட புகார்கள், ஏதேனுமிருந்தால், அதன் விவரங்கள் | |
| 4.செயல்பாட்டு நேரங்கள் | |
| 5.வழித்தடம் செயல்பாட்டுப் பகுதி: | |
| 6. வெளியேற்றும் இடம் | சம்மந்தப்பட்ட நகராட்சிகளால் அளிக்கப்பட வேண்டும். |

## உறுதிமொழி

என்னால், அளிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனக்கு தெரிந்தவரையில் மற்றும் நான் நம்புகிற வரையில் உண்மை என்று நான் சான்றளிக்கிறேன். இணைக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் நான் படித்து புரிந்து கொண்டேன் என்றும் நான் சான்றளிக்கிறேன் மற்றும் அவற்றுக்கு கட்டுப்படுவதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

தேதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம்:

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

இந்த படிவம் பின்வருவனவற்றுடன் நகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

a. வாகனங்கள் ஆவணங்கள் பதிவுச் சான்றிதழ் வாகன தகுதி சான்றிதழ்,சாலை வரி காப்பிடு சான்றிதழ் மற்றும் பொருட்கள் வாகன அனுமதி மற்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அனைத்து பிற விவரங்கள்..

b. வாகனத்தின் புகைப்படங்கள்:

c. எண் தகட்டைக் (Number Plate) காண்பிக்கிற வாகனத்தின் முன்பக்க மற்றும் பின்பக்கபுகைப்படங்கள்.

d. **விண்ணப்பதாரரைப் பொறுத்தவரையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:** விண்ணப்பதாரரின்(களின்) முகவரி சான்று, விண்ணப்பதாரரின்(களின்) புகைப்பட ID சான்று, GST பதிவு சான்றிதழின் நகல், பான் அட்டையின் நகல், முன்னர் வழங்கப்பட்ட உரிமத்தின் நகல் (ஏதேனுமிருந்தால்), ESI மற்றும் EPF பதிவுச் சான்றிதழின் நகல் (பொருந்துமெனில்).

e. பணியமர்த்தப்பட்டுள்ள ஓட்டுநர்களுக்கும், ஊழியர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆவணங்கள் அரசால் அளிக்கப்பட்ட புகைப்பட அடையாள மற்றும் முகவரி சான்று, மருத்துவ சான்றிதழ் (மாநில அரசின் பதிவு செய்யப்பட்ட மருத்துவரால் அளிக்கப்பட்டது) மற்றும் ஓட்டுநர் உரிமம்.

f. பணியமர்த்தப்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.10 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) காப்பீடு செய்யப்பட்ட தனிநபர் விபத்து காப்பீட்டு ஆவணம்.

g. ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) உரிமக் கட்டணம் மற்றும் கட்டணம் செலுத்தும் முறை கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் பெயரில் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலை.

2. சரிபார்த்தல் நோக்கத்திற்காக அசல் ஆவணங்களை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆவணமும் உரிம காலத்தில் காலாவதியானால், உரிமம் பெறுபவர் அந்த ஆவணம் செல்லுபடி காலத்தின் கடைசி தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஒரு புதிய செல்லுபடியாகக்கூடிய சான்றிதழ் பெற வேண்டும். பணியாளரில் ஏதேனும் மாற்றம் இருந்தால், புதிய பணியாளரின் ஓட்டுநர் உரிமத்தின் புகைப்பட நகல், புகைப்பட அடையாளச் சான்று மற்றும் முகவரிச் சான்று ஆகியவை அத்தகைய பணியமர்த்தலிலிருந்து ஏழு நாட்களுக்குள் உரிமம் பெறுபவரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவம் உரிமக் கட்டணம் மற்றும் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்போது, உரிமம் வழங்கும் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட ஒப்புகை ரசீது, உரிமத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும் வரை வைத்திருக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட ஆவணங்களும், தகவல்களும், அந்த விண்ணப்பத்தினை திருப்திகரமாக செயலாக்கம் செய்வதற்கு தேவையான அனைத்து விபரங்களையும் வழங்கவில்லை எனில், ஆணையாளர், விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் தேவையென கருதுகிற அத்தகைய கூடுதல் விவரக்கூறுகளையும், விவரங்களையும் வழங்குமாறு கேட்கலாம். விண்ணப்பம் மற்றும் அனைத்து முழுமையான / சம்மந்தப்பட்ட விவரங்கள் பெறப்பட்ட பிறகு முப்பது நாட்களுக்குள் உரிமம் ஆணையாளரால் வழங்கப்படும்

3. சட்டம் அல்லது விதிகளின்படி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படவில்லை எனில் அல்லது கேட்கப்பட்ட கூடுதல் விவரங்களை விண்ணப்பதாரர் அளிக்கத் தவறுகிறார் எனில் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் உண்மையென சன்றளிக்கப்பட முடியாது எனில், ஆணையாளர் எழுத்துப்பூர்வமான காரணங்களுக்காக அந்த விண்ணப்பத்தினை நிராகரிக்கலாம் அல்லது உரிமத்தினை புதுப்பிக்க மறுக்கலாம் மற்றும் அதன் நகல் ஒன்றை விண்ணப்பதாரருக்கு அளிக்க வேண்டும்.

4. ஒரு உரிமத்தினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், உரிமம் காலாவதியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இந்தப் படிவத்தில் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் உரிமை வழங்குவதற்கு பொருந்துகிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உரிமத்தினை புதுப்பிப்பதற்கும் பொருந்தும். அத்தகைய புதுப்பித்தல் விண்ணபத்திற்கு அது வரப்பெற்றியிருந்து 20 நாட்களுக்குள் மற்றும் உரிமம் காலாவதியாகும் தேதிக்கு முன்னர் ஆணையாளர் தீர்வு காண வேண்டும். உரிமத்தினை புதுப்பிப்பதற்கு, நகராட்சியால் வரையறுக்கப்படுகிற விகிதத்தில் உரிமக் கட்டணம் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

## சரிபார்ப்பு பட்டியல்

| வ.எண். | | வாகனங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டது | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் முகவரி சான்று | | | | | |
| 2 | விண்ணப்பதாரரின் புகைப்பட அடையாளச் சான்று | | | | | |
| 3 | GST பதிவு சான்றிதழின் நகல் | | | | | |
| 4 | PAN அட்டையின் நகல் | | | | | |
| 5 | முன்னர் வழங்கப்பட்ட உரிமத்தின் நகல் ஏதேனும் இருந்தால் | | | | | |
| 6 | ESI மற்றும் EPF பதிவு சான்றிதழ்களின் நகல் பொருந்தினால் | | | | | |
| 7 | பதிவு சான்றிதழ் | | | | | |
| 8 | வாகன தகுதி சான்றிதழ் | | | | | |
| 9 | சாலை வரி | | | | | |
| 10 | காப்பீட்டு சான்றிதழ் | | | | | |
| 11 | வாகன அனுமதி | | | | | |
| 12 | வாகனத்தின் புகைப்படம் வாகன எண் தகட்டினை காண்பிக்கிற முன்பக்கம் மற்றும் பின்பக்கம் | | | | | |
| 13 | அரசு புகைப்பட ID மற்றும் முகவரி சான்று (ஆதார்) ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | | |
| 14 | மருத்துவ சான்றிதழ் ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | | |
| 15 | தனிநபர் விபத்து காப்பிட்டு ஆவணம் ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | | |
| 16 | ஓட்டுநர் உரிமம் | | | | | |
| 17 | வரையறுக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட கையொப்பமிடப்பட்ட உறுதிமொழி | | | | | |

**கசடு அல்லது கசடுகழிவு போக்குவரத்து இயக்குபவர் உரிமத்திற்கான விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டிய உறுதிமொழி.**

1. 2013–ம் ஆண்டு மனிதக்கழிவுகளை கையாளுபவர்களை பணியமர்த்தப்படுவதைத் தடைசெய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்கள் மீதான மற்றும் தூய்மை பணியாளர்கள் கழிவுநீர் அமைப்புக்குள் அல்லது கழிவுநீர்த் தொட்டிக்குள் செல்வதன் மீதான தடை குறித்த தமிழ்நாடு அரசின் ஆணைகளை நான் (விண்ணப்பதாரரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி) அறிவேன். அந்த சட்டம், விதிகள், இதுசம்மந்தமாக வெளியிடப்படும் ஒழுங்குமுறைகள், துணைவிதிகள், அறிவிக்கைகள் மற்றும் அறிவுறுத்தங்களுக்கு கட்டுப்படுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.
2. கசடு மற்றும் கசடுகழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பான சட்டம், விதிகள், அவ்வப்போது வெளியிடப்படும் ஒழுங்குமுறைகள், துணைவிதிகள், அறிவிக்கைகள், அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் பின்பற்றுவேன்.
3. நான், கசடு அல்லது கசடுகழிவு சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் அகற்றுதல் செயல்பாடுகளை அனைத்து பாதுகாப்பு விதிகள் மற்றும் நச்சு வாயுக்கள் இருக்கிறதா என்பதற்கான சோதனை, வழிகாட்டு நெறிமுறைகள் உட்பட பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளையும் கடைபிடித்த பின்பே மேற்கொள்வேன் மற்றும் போதுமான பாதுகாப்பு துணைக்கருவிகளை அளிப்பேன்.
4. சட்டம், விதிகள், ஒழுங்குமுறைகள், துணைவிதிகள், அறிவிக்கைகள், அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் வகையினங்களில் எதனையும் பின்பற்றவில்லை எனில், எனக்கு அளிக்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்படலாம் என்பதை நான் புரிந்துகொண்டேன். மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டது என்றும் அவை முழுமையாக கடைப்பிடிக்கப்படும் என்றும் இதன்மூலம் நான் உறுதிகூறப்படுகிறது..

தேதி

பெயர்: கையொப்பம்

படிவம் 13

**விதி 374(1)மற்றும் (4–ஐப் பார்க்கவும்) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023**

**கசடு மற்றும் கசடுகழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்**

ல் வசிக்கும்,                                        ன் மகன்/மனைவி/மகள்,திரு/திருமதி/செல்வி

உரிம எண்:

உரிமம் வைத்திருப்பவர் :

வாகனப் பதிவு எண்(கள்) :

ஓட்டுநர்கள் பெயர், ஓட்டுநர் உரிம எண்ணுடன் :

உரிமம் வைத்திருப்பவருக்கு ஒதுக்கப்பட்ட

வழித்தடங்கள் / பகுதி(கள்) :

வெளியேற்றும் இடம்(ங்கள்) :

செயல்பாட்டு நேரம் :

இந்த உரிமம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு நடைமுறையில் இருக்கும், மற்றும் இது மாற்றத்தக்கதல்ல.

செல்லுபடியாகும் காலம்–––––––––––––––முதல்––––––––––––––––வரை

உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இணைக்கப்பட்டுள்ளன.. அவ்வப்போது அரசால் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால்/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் வெளியிடப்படும் அனைத்து விதிகள், ஒழுங்குமுறைகள்.அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஆணையரின் முத்திரை மற்றும் கையொப்பம்,

நகராட்சி மன்றம்/நகராட்சி/

இடம்:

தேதி:

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்.**

1. உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து உரிமம்இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாகும். மற்றும் அது மாற்றத்தக்கதல்ல அந்த உரிமம் வெளிப்படையாகத் தெரியும் வகையில் குறிப்பிட்ட வாகனத்தின் முன்பக்க கண்ணாடி முகப்பில் மீது காட்சிப்படுத்தப்பட வேண்டும்..
2. அந்தக் குறிப்பிடப்பட்ட வாகனம் எந்தவொரு வகையிலுமான தொழிற்சாலை கழிவுகள் அல்லது தொழிற்சாலை கழிவுகளுடன் கலந்த இயற்கை கழிவுகளை சேகரித்தல் மற்றும் ஏற்றிச்செல்லுதலுக்கு பயன்படுத்தப்படக்கூடாது.
3. கசடு மற்றும் கசடு கழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் வெளியேற்றுதலின்போது உரிமத்தினை கேட்டால் உரிமம் பெறுபவர் அதனை காட்ட வேண்டும்.
4. உரிமம் பெறுபவர்,–

   (அ) செயல்பாட்டு நேரங்கள்; மற்றும்

   (ஆ) உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, வாகன செயல்பாட்டு பகுதி / வழித்தடங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

5. ஏற்றிச் செல்லும்போது ஏற்படும் கசிவுகளை சுத்தப்படுத்தத் தவறினால், அதனை சுத்தப்படுத்துவதற்கு, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் செய்யப்படும் அதுதொடர்பான செலவுகளை, அபராதக் கட்டணங்களுடன் சேர்த்து, உரிமம் பெறுபவர் செலுத்த வேண்டும்.
6. இந்த உரிமம் வழங்குதல் என்பது, பல்வேறு மற்ற பொருந்தக்கூடிய விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின்கீழ், வியாபாரம் அல்லது வர்த்தகம் அல்லது நடவடிக்கைக்கு வேண்டப்படுகிற தேவைகள் அல்லது உரிமங்கள் அல்லது இசைவுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக பொருள்படாது.
7. உரிமம் பெறுபவர் கசடு மற்றும் கசடுகழிவை, உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அதனை கொட்டுவதற்கான வசதிகளில், செயல்பாட்டு நேரங்களின்போது, கொட்ட வேண்டும், கழிவுநீர்த் தொட்டிகள் / குழிகளிலிருந்து கசடை அகற்றுவதற்கும், அதனை கொட்டுவதற்கென நியமிக்கப்பட்ட வசதிகளுக்கு கசடு மற்றும் கசடுகழிவை எடுத்துச் செல்வதற்கும், உரிமம் பெற்ற இயக்குபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
8. உரிமம் பெறுபவர், கசடு மற்றும் கசடுகழிவை, அதனை வெளியேற்றுவதற்கான, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் வசதிகள் தவிர, எந்தவொரு இடம் அல்லது தளத்திலும் வெளியேற்றுவதாக கண்டறியப்பட்டால், மேற்படி உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதாகக் கருதப்படும்.
9. உரிமம் பெறுபவர், சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் கொட்டுதலுக்கான ஒவ்வொரு ஊர்திப் பயணத்தையும் பதிவு செய்கிற ஒரு ஊர்திக் குறிப்பேட்டை பராமரிக்க வேண்டும் மற்றும் அதனை நேர்வுக்கேற்ப, சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு, ஒரு வருடத்தில் உள்ள ஒவ்வொரு காலாண்டின் 10–ம் நாளுக்கு முன்பாகவும் சமர்ப்பிக்க வேண்டும்.
10. உரிமம் பெறுபவர், கசடு மற்றும் கசடுகழிவை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படும் குறிப்பிடப்பட்ட வாகனத்தில், செயற்கைக்கோள் வழிகாட்டிக் கருவி (GPS) அல்லது, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வாகன கண்காணிப்பு அமைப்பை பொருத்த வேண்டும். உரிமம் பெறுபவரின் நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு, அந்த GPS கருவியை பொருத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். உரிமம் பெறுபவர், GPS கருவி செயல்பாட்டில் உள்ளது மற்றும் தடையின்றி தரவுகளை அனுப்புகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். வரப்பெறும் தரவுகளில் ஏற்படும் தடை, உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதாக கருதப்படும்.
11. உரிமம் பெறுபவர், எந்தவொரு விபத்தை தவிர்க்கும் வகையில், குறிப்பிட்ட வாகனத்தை நன்கு செயல்படுகின்ற நிலையில் பராமரிக்க வேண்டும்.
12. உரிமம் பெறுபவர், கழிவுநீர் சேகரிப்பு இடத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குகொண்டு செல்லப்படும்போது, கழிவுநீர் கசிவு ஏற்படாமல் உரிமதாரர் உறுதி செய்ய வேண்டும். கழிவுநீர் தற்செயலாகக் கசிந்தால், உரிமதாரர் உடனடியாக கழிவுநீர்க் கசிவைக் கட்டுப்படுத்தவும்,சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், கசிவு ஏற்பட்ட இடங்களிலிருந்து உடனடியாக அனைத்து கசிவுகளையும் அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிமம் பெறுபவர் அருகில் அமைந்துள்ள, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலகத்திற்கு மற்றும் / அல்லது அந்த நிகழ்வு நடந்த இடத்திற்கு அருகில் உள்ள கழிவுநீர் வெளியேற்றும் வசதிக்கு (decanting facility), கசிவு குறித்தும் அந்நிகழ்வு நடந்த பிறகு உடனடியாக எடுக்கப்பட்ட. நடவடிக்கை குறித்தும் தெரிவிக்க வேண்டும்.

13. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநர் மற்றும் தூய்மை பணியாளர்கள்,காலமுறை பயிற்சிக்கு செல்வதையும், நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால், அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகிற பிற நடவடிக்கைகளில் பங்கேற்கிறார்கள் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.
14. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்து ஓட்டுநர்களும்,தூய்மை பணியாளர்களும், கழிவுநீர்க்குழாய்கள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளை பராமரிப்பதற்கும், இயக்கமுறை சுத்தப்படுத்தலுக்கும், அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படுகிற சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிலையான இயக்க நடைமுறைகளை பின்பற்றுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு உபகரணங்கள் / பாதுகாப்பு விசைமாற்றிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் கசடு மற்றும் கசடுகழிவு சேகரித்தல், ஏற்றிச்செல்லுதல் மற்றும் வெளியேற்றுதலின் போது அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.
15. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநரும், தூய்மை பணியாளர்களும்வருடாந்திர மருத்துவ பரிசோதனைக்கு செல்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். பரிசோதனை குறித்த பதிவேட்டை உரிமம் வழங்கும் அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
16. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநர் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கும், ஒவ்வொரு வருடமும் ரூபாய் 10 இலட்சத்திற்கான (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) தனிநபர் விபத்து காப்பீடு எடுக்க வேண்டும். காப்பீட்டு ஆவணத்தினை, உரிமம் வழங்கும்போதும் புதுப்பிக்கும்போதும் நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
17. அனைத்து நேரங்களிலும், வாகனம் மற்றும் உபகரணத்தின் பாதுகாப்பான இயக்கத்திற்கு, ஓட்டுநர் மற்றும் சேவை வழங்குநர்கள் பொறுப்பாவார்கள். போக்குவரத்து விதிகள் அனைத்து நேரங்களிலும் பின்பற்றப்பட வேண்டும். கசடு மற்றும் கசடுகழிவினை ஏற்றிச்செல்வதற்கு போதுமான பயிற்சி பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஓட்டுநர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து விபத்துகள் மற்றும் நற்குறிப்புகளும் உரிமம் பெறுபவரால் மறுஆய்வு செய்யப்படவும், விசாரிக்கப்படவும் வேண்டும். கசடு கசிவு ஏதும் இல்லை அல்லது வாகனத் தொட்டிக்கு வெளியில் ஏதும் கசியவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு, பொதுச் சாலைகளில் ஓட்டுவதற்கு முன்பு, ஓட்டுநர்கள் அனைத்து வாகனங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். கசடை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களிலும், அனைத்து நேரங்களிலும், சுண்ணாம்பு அல்லது குளோரின் சாயம் போன்ற கசிவு கட்டுப்பாடு அல்லது உறிஞ்சு பொருட்கள் மற்றும் தொற்றுநீக்க பொருட்கள் வைத்திருக்கப்பட வேண்டும். கழிவுநீர் திறப்புவாய், வடிகால் அமைப்பு பகுதிகள், கால்வாய்கள், சிற்றோடைகள், ஆறுகள் அல்லது மற்ற தண்ணீர் பெறுகிற அமைப்புகள் அல்லது நிலத்தில் கசடு அல்லது கசடுகழிவு எதுவும் வெளியேற்றுவதற்கு அனுமதிக்கக்கூடாது; மற்றும் வெளிப்படையான படிவங்கள் முறையாக நிரப்பப்பட வேண்டும்.

18. உரிமம் பெறுபவர், 2013–ம் ஆண்டு மனித துப்புரவுப் பணியாளர்களாக பணியமர்த்தலை தடைசெய்தல் மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டத்தின் (2013–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 25)வகையினங்களுக்கு மாறாக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, மனித தூய்மை பணியாளரையோ அல்லது எந்தவொரு நபரையுமோ, ஒரு கழிவுநீர்திறப்புவாய் அல்லது கழிவுநீர்த் தொட்டியினை தீங்குவிளைவிக்கிற வகையில் சுத்தப்படுத்துவதில், ஈடுபடுத்தவோ அல்லது பணியமர்த்தவோ கூடாது.

19. உரிமம் பெறுபவர், நிறுவனத்தின் பெயர், தொடர்பு எண், நிறுவனத்தின் அடையாளம் மற்றும் கசடு ஏற்றிச்செல்லும் வாகனத்தின் ஊர்திக்கூடு எண் ஆகியவை கசடை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனத்தின் இருபுறமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேற்படி தகவல் குறைந்தபட்சம் 3 அங்குலம் உயரமுள்ள நிலையான மற்றும் தெளிவான எழுத்துக்களை பயன்படுத்தி எழுதப்பட வேண்டும் மற்றும் அது ஒரு பிரதிபலிப்பு பொருளால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

20. ஒரு செல்லுபடியாகக்கூடிய உரிமம் வைத்திருக்கிற எந்தவொரு உரிமம் பெற்றவரும், கசடை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படுகிற அனைத்து வாகனங்களையும், வாகனத் தொட்டிகளையும், பின்வரும் தேவைகளின்படி பராமரிக்க வேண்டும்:

(i) கசடுகழிவு மற்றும் வீட்டுக்கழிவுகளை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படுகிற குறிப்பிட்ட வாகனம், கசடு மற்றும் கசடுகழிவை பாதுகாப்பாக ஏற்றிச்செல்லும் வகையில் கசிவற்ற ஊர்திக்கூட்டையும், பூட்டமைப்பையும் கொண்டிருக்க வேண்டும் மற்றும் மற்றொரு வாகனம் அல்லது எந்தவொரு நிலையான கட்டமைப்புடனும் ஏற்படும் மோதலை தாங்குவதாக இருக்க வேண்டும்.

(ii) குறிப்பிட்ட வாகனம், சாலையில் செல்வதற்குரிய தகுதி குறித்த நில போக்குவரத்து அலுவலக பாதுகாப்பு தரநிலைகளின்படி, நன்கு இயங்கும் நிலையில் இருக்க வேண்டும்.

(iii) சேகரிப்பு வாகனம் மற்றும் வாகனத்தொட்டி அதிகப்படியான நாற்றம் அல்லது பொதுச்சுகாதார தீங்கினை தடுக்கும் வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(iv) குறிப்பிட்ட வாகனம் நீர்க்கசிவின்றி இருக்க வேண்டும்.

(v) அனைத்து குழாய்கள், வால்வுகள் மற்றும் இணைப்புகள் சுத்தப்படுத்துவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்

(vi) மாற்றும்போது அல்லது ஏற்றிச்செல்லும்போது எந்தவொரு பொருளும் கசியாது அல்லது வாகனத்தொட்டிக்கு வெளியில் செல்லாது என்கிற வகையில் அனைத்து உள்புகும் மற்றும் வெளியேறும் இணைப்புகளும் கட்டுமானம் செய்யப்படவும், பராமரிக்கப்படவும் வேண்டும்.

(vii) கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் தெளித்தல் அல்லது வெள்ளப்படுத்துதல் இல்லாத அளவிற்கு வெளியேற்றுப் வேகத்தினை கட்டுப்படுத்தும் வகையில் வெளியேற்று வழிகள் வடிவமைக்கப்பட வேண்டும்.

(viii) வெளியேற்றுக் குழாயானது, வாகனத் தொட்டியின் முடிவில் இருந்து ஆறு அங்குலத்திற்கு குறையாமல் வெளியில் நீட்டிக்கொண்டிருக்க வேண்டும், மற்றும்

(ix) வெளியேற்றுக் குழாயின் முடிவுப்பகுதியில், திருகித் திறக்கும் மூடி பொருத்தப்பட வேண்டும்.

# படிவம் 14

(விதி 377 (b)–ஐப் பார்க்கவும்]

## கசடு மற்றும் கசடுக்கழிவு ஏற்றிச்செல்லும் பயண

| வ எண், | பயண தேதி | வாகன எண் | விண்ணப்பதார ரின் உரிம எண் | பயண நேரம் | | சேகரிக்கும் இடம் | வெளியேற்றும் இடம் | மொத்த பயண தூரம் | வளாகங்களின் வகை | ஓட்டுநரின் பெயர் | ஓட்டுநர் தொடர்பு எண் | கையொப்பம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆரம்பம் | முடிவு | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

**விவரங்களுக்கான ஊர்திக் குறிப்பேடு**

கீழே உள்ள TN நகராட்சியின்சட்டத்தின் பிரிவு 199, அத்தியாயம் XI, பக்கம் 109 (ஆவணத்தில்குறிப்பிடப்பட்டுள்ளபடி) ஐப் பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1k4ZXdJSD103c7uwo1MqS3C2QFr4yHH16/view?usp=drive

"பக்கம் 193 அத்தியாயம் X–A–ஐப் பார்க்கவும் – கசடு மற்றும் கசடுகழிவு–

https://drive.google.com/file/d/119SdkuL45fRIS-lh2CVcSzYXGK5cRtx/view?usp=drive

"நகராட்சியின் விதிகள் 2023 இன் பக்கம் 368 அத்தியாயம் XI–பகுதி IV–ஐப் பார்க்கவும் – கீழே கொடுக்கப்பட்டுள்ளது –

https://drive.google.com/file/d/1Ebv-8cFAvTJlCP3u7MdnMg1yG1qugXbL/view?usp=drive.

"தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 கீழே உள்ள இணைப்பில் உள்ளது

https://drive.google.com/file/d/1Rw07rCUi5gGXS4s7u300fc50s6dNbKF7/view?usp=drive

"இந்தியாவின் தேசிய கட்டிடக் குறியீடு 2016–2வது தொகுதியைப் பார்க்கவும்–" செப்டிக் டேங்க் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது

https://drive.google.com/file/d/1wI4FM4HtJJnUMYCvLGOaObPsJ9tzIomT/view?usp=drive

"புதிய OSS–கசடுகழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களுக்கான பக்கம் 18, பிரிவு 2.3.1–கட்டமைப்பு தரநிலைகளைப் பார்க்கவும், அரசாணை நிலை எண் 1, தேதியிட்ட 02.01.2023 கீழே உள்ள இணைப்பில் காணலாம்.

"பக்கம் 47, அத்தியாயம் VI. (நுழைவு மற்றும் ஆய்வு அதிகாரங்கள்), பிரிவு 48 ஐப் பார்க்கவும்.

சுகாதார அதிகாரி அல்லது அவரால் இதற்காக அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நபரும், எந்தவொரு நியாயமான நேரத்திலும், பரிந்துரைக்கப்பட்ட அறிவிப்புக்குப் பிறகும், இந்தச் சட்டத்தின் விதிகளையோ அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு விதி, துணைச் சட்டம் அல்லது உத்தரவையோ நிறைவேற்றுவதற்கான எந்தவொரு நிபந்தனையையும் உள்ளிடலாம்.

02.01.2023 தேதியிட்ட கசடுகழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை நிலை எண் 1, இணைப்பு 12 (A) மற்றும் இணைப்பு 12 (8) க்கு பக்கம் 111. "PEMSR சட்டம் 2013 ஐ கீழே காணலாம்" tos.ve.google.com/ field/ ToKoRuV4locfdMesukgDTDSzaAWMd-en/view?usp=drive இணைப்பு

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பக்கம் 371-பிரிவு 376 "பதவி நீக்கக் கட்டணம்" ஐப் பார்க்கவும்.

டைட்ஸ் strive.google.com/open?id=1mYRKIAHsSqle 38tMQ6xnPMgW5itz&usp=drive_copy

"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2023 இன் பிரிவுகள் 179-8 முதல் பிரிவுகள் 179 E வரை உள்ள பகுதிகளுக்கு, கீழே உள்ள இணைப்பில் பக்கம் 194 ஐப் பார்க்கவும்-

https://drive.google.com/file/d/1yok@hhjXVIO280mVSmpdRjAcc-MgOSdR/view?usp=drive

"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2023-ஆவணத்தின் பிரிவு 179-F, அத்தியாயம் X-Aக்கு பக்கம் 196-ஐ கீழே உள்ள இணைப்பில் பார்க்கவும் https://drive.google.com/file/d/1yok@hhjXVIO280mVSmpdRjAco-MgOSdR/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் பக்கம் 100, பிரிவு 161ஐ கீழே உள்ள இணைப்பில் பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1k4ZXdJSD103c7uwo1MgS3C2QFr4yHH6/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரிவுகள் 179-G, H, அத்தியாயம் X-A க்கு பக்கம் 196 ஐப் பார்க்கவும்.(திருத்தம்) சட்டம், 2023, கீழே உள்ள இணைப்பில்

https://drive.google.com/file/d/1yok9hhjXVIO280mVSmpdRjAcc-MgOSdR/view?usp=drive

**தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 379, அத்தியாயம் XI-பகுதிIVக்கு பக்கம் 371 ஐப் பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1Ebv-8cFAVTJICP3u7MdnMg1yG1qugXbL/view?usp=drive.link

"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 179-F இன் கீழ் பக்கம் 196 ஐப் பார்க்கவும். 2023

https://drive.google.com/file/d/1yok9hhjXViO280mVSmpdRjAcc-MgOSdR/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2023 இன் X-A அத்தியாயத்தின் 179-1 பிரிவுகளுக்கு பக்கம் 197 ஐப் பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1yok@hhjXViO280mVSmpdRjAcc-MqOSdR/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 இன் பிரிவு 380, அத்தியாயம் XI- பகுதிIVக்கு பக்கம் 372-ஐப் பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1Ebv-8cFAvTJICP3u7MdnMq1yG1quqXbL/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 இன் பிரிவு 374 க்கான பக்கம் 368 testove.google.com/feldEby BofAvTCP307ManMaTy TougXbL/view?usp=drive

மேற்கண்ட விபரப்படி கசடு கழிவு மேலாண்மை துணை விதிகள் 2024 விபரங்களை தினசரி நாளேட்டில் வெளியீட்டு பொதுமக்கள்/ வியாபாரிகள் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் 15 நாட்களுக்குள் அளிக்குமாறு கோரலாம். பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலனை செய்து உரிமக்கட்டணத் தொகையினை இறுதி செய்து நகர்மன்ற ஒப்புதல் பெற்று மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதிக்கும். மேலும், தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0845 /2025/இ1)

**பொருள் எண் : 33**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 21 வார்டுகள் உள்ளது. இந்நகராட்சி பகுதியில் 15840 எண்ணிக்கையிலான குடியிருப்புகளும், 3057 எண்ணிக்கையிலான வணிக நிறுவனம்/ கடைகளும் உள்ளது. இந்நகராட்சியானது சுமார் 64000 மக்கள் தொகை கொண்டது ஆகும். மேலும், இந்நகராட்சி பகுதியில் தினசரி சுமார் 20000 முதல் 25000 வரை பொதுமக்கள் வந்து செல்கின்றனர். இந்நகராட்சியானது மாவட்ட தலைநகரமாக உள்ள காரணத்தினால் சுற்றுப்புற கிராம மற்றும் வெளியூர்களிலிருந்து தினமும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். மாண்புமிகு அமைச்சர் பெரு மக்கள், முக்கிய பிரமுகர்கள், முக்கிய அரசு உயர் அலுவலர்கள் அடிக்கடி இந்நகருக்கு வந்து செல்வதாலும், அரசு விழாக்கள் மற்றும் கோவில் திருவிழாக்கள் நடைபெறும் காரணமாக நகரின் தூய்மையை மேம்படுத்துவது அவசியமாக உள்ளது. பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் சுகாதாரக்கேடு ஏற்படாத வகையில் நகரில் உள்ள அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களையும் மழைநீர் வடிகாலையும், பொது இடங்களையும் (பேருந்து நிலையம், பூங்காக்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள்) ஆகியவற்றின் சுற்றியுள்ள பகுதிகளில் முறையாக பராமரிக்க வேண்டிய சூழல் உள்ளது. நகரில் உள்ள தெருக்களின் நீளம் 108.836 கி.மீ, தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் 10.800, மழைநீர் வடிகால்களின் நீளம் 105.880 கி.மீ ஆகும். இந்நகராட்சி பகுதியில் தினசரி கேரமாகும் 18.96 மெ.டன் ஆகும். இதில் மக்கும் குப்பையின் எடை அளவு 12 மெ.டன், மக்காத குப்பையின் எடை அளவு 6.96 மெ.டன் ஆகும். தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.101 ன் தெரிவிக்கப்பட்டுள்ள அரசு விதிமுறைகளின் படி இந்நகராட்சியில் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ளுவதற்கு 219 எண்ணிக்கை தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், இந்நகராட்சியில்அனுமதிக்கப்பட்ட நிரந்தர தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை 68 ஆகும். நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.33053/2022/EA2-SBM-18 நாள்.10.01.2023 ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை வெளிக்கொணர்வு ஒப்பந்த முறையில் மேற்கொள்வதற்கு M/s.கிரீன் வாரியர் திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு கடந்த 01.07.2023 அன்று முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தார் 130 எண்ணிக்கையிலான தூய்மைபணியாளர்களையும், 9 எண்ணிக்கையிலான ஓட்டுநர்களையும், 6 எண்ணிக்கையிலான துப்புரவு பணிமேற்பார்வையாளர்களையும், பணியில் ஈடுபடுத்தி இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி நிறுவனத்தார் ஒப்பந்த விதிமுறைகளின் படி குடியிருப்பு, வணிக பகுதிகளில் சேகரிக்கும் மக்கும் குப்பைகள் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் மூன்று நுண்உரமையங்களில் கொண்டு சேர்க்கின்றனர்.

| வ.எண். | இடம் |
|---|---|
| 1 | துருகம் சாலை மயானப்பகுதி யூனிட் 1 |
| 2 | துருகம் சாலை மயானப்பகுதி யூனிட் 2 |
| 3 | நகராட்சி வளாக பகுதி யூனிட் 3 |

தற்போதுள்ள நிலையில் போதிய எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேற்படி, மூன்று நுண் உர மையங்களிலும் தினசரி தரம் பிரித்து சேகரிக்கப்படும் 12 மெ.டன் அளவுள்ள மக்கும் குப்பைகளை இயற்கை உரமாக்கும் பணிக்கு 12 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இப்பணியாளர்களுக்கு ஊதியம், சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், ஆயுள் காப்பீடு மற்றும் இதரப்படிகளை கணக்கீடு செய்யப்பட்டால் நகராட்சிக்கு கூடுதலாக செலவினம் ஏற்படும் நிலை உள்ளன. எனவே, நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 ன் படி 175,176, 177 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 ன் படி 391,392 ஆகியவற்றின் படி இந்நகராட்சி பகுதியில் மக்கும் திடக்கழிவுகளை நவீன அறிவியல் முறையில் அகற்றுவதற்கும், மேற்படி 3 நுண் உரமையங்களையும் முறையாக பராமரித்து இயற்கை உரம் தயாரிக்கவும், தனியார் சேவை நிறுவனத்தினை வெளிக்கொணர்வு ஒப்பந்த முறையில் தேர்வு செய்யவும், மேற்படி பணியினை 01.07.2025 முதல் 31.03.2026 வரையிலான 9 மாத காலங்களுக்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.42.00 (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சம் மட்டும்) லட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.333/2025/எச்1)**

**பொருள் எண் : 34**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.33553/2022/EA2–SWM–18 நாள்.10.01.2023 ன் படி திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) அடிப்படையில் வார்டு எண்.01 முதல் 21 வரை தூய்மை பணிகள் மேற்கொள்ள M/s.கிரின் வாரியர் திருவள்ளுர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இந்நகர்மன்ற தீர்மான எண். 226 நாள்.28.11.2024 ன் படி 01.07.2024 அன்று முதல் 30.06.2025 வரை ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. தற்போது எதிர்வரும் 30.06.2025 அன்றுடன் முடிவடைகிறது. மேற்படி நிறுவனத்தார் நல்லமுறையில் பணிகளை மேற்கொண்டு வருவதாக துப்புரவு ஆய்வாளர் அவர்களால் சான்று அளித்துள்ளார்.

மேற்கண்ட நிறுவனத்தினரால் கடந்த 16.06.2025 அன்று வழங்கப்பட்ட கடிதத்தில் 30.06.2025 அன்றுடன் ஓராண்டு முடிவடைவதால் மூன்றாம் ஆண்டிற்கு 10 சதவிகிதம் உயர்த்தி வழங்க வேண்டி கடிதம் பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த உடன்படிக்கையின் படி 9.3 (c) ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் 10 சதவிகிதம் உயர்த்தி வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணிகளை மேற்கொள்ளும் M/s.கிரீன் வாரியர், திருவள்ளுர் என்ற நிறுவனத்திற்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் ஒரு மெ.டன் குப்பைக்கு தொகை ரூ.5114/– வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 10 சதவிகிதம் உயர்த்தும் பட்சத்தில் ஒரு மெ.டன் அளவு குப்பைக்கு தொகை ரூ.511/– உயர்த்தி மொத்தம் ரூ.5625/– யை கடந்த 01.07.2025 அன்று முதல் வழங்கிடவும், மேற்கண்ட பணிக்கு ஓராண்டிற்கு 01.07.2025 முதல் 30.06.2026 வரை பணி உத்தரவு வழங்கவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.390.00 லட்சத்தினை வருவாய் நிதி மற்றும் 15 வது நிதிக்குழு நிதி ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 2682/2022/எச்1)**

**பொருள் எண் : 35**

நகர்மன்ற தீர்மான எண்.27 நாள்.07.02.2025 ல் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடையில் பிரேதங்கள் எரியூட்டுவதற்கும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள M/s.M.H.T.Engineering Chennai என்ற நிறுவனத்திற்கு கடந்த 01.04.2025 முதல் 30.06.2025 வரை பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனம் முறையாக பணிகளை மேற்கொண்டு வருவதாக துப்புரவு ஆய்வாளர் அவர்களால் சான்று அளித்துள்ளார். மேற்படி பணி நீட்டிப்பு உத்திரவு 30.06.2025 அன்றுடன் முடிவடைவதால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி நிறுவனம் ஏற்கனவே அளித்துள்ள அதே விலை விகிதத்தில் பணிகளை மேற்கொள்ளுவதற்கு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு துருகம் சாலையில் அமைந்துள்ள நகராட்சியின் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 01.07.2025 முதல் 30.09.2025 வரை 3 மாதத்திற்கு நீட்டிப்பு செய்யவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/ 691 /2020 )**

**பொருள் எண் : 36**

நகர்மன்ற தீர்மான எண் 215 நாள்.28.11.2024 ல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 வரை உள்ள பகுதியில் தினசரி சேகரமாகும் மக்காத குப்பைகளை முறையாக பண்டல் செய்து சிமெண்ட் நிறுவனத்திற்கு கொண்டு சென்று இறுதியாக்கம் செய்யும் பணிக்கு M/s.முருகப்பா டிரேடர்ஸ், மாசிநாயக்கன்பட்டி, வாழப்பாடி என்ற நிறுவனத்தின் மூலமாக மக்காத மறுசுழற்சிக்கு பயன்படாத குப்பைகளை சிமெண்ட் நிறுவனத்திற்கு வாடகை வாகனத்தின் மூலமாக கொண்டு செல்ல ஒரு கிலோவிற்கு ரூ.1.50/-வீதம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிகள் மேற்படி நிறுவனத்தினரால் நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு 09.07.2025 அன்றுடன் ஓராண்டு பணிகள் முடிவடைகிறது.

மேலும், மேற்கண்ட பணியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு M/s. முருகப்பா டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தாரால் சம்மத கடிதம் அளிக்கப்பட்டு உள்ளது. எனவே, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் M/s முருகப்பா டிரேடர்ஸ் மூலமாகவே மேற்கொள்ள பணி நீட்டிப்பு எதிர்வரும் 10.07.2025 முதல் 31.07.2025 வரை 21 நாட்களுக்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1642/2024/எச்1)**

**பொருள் எண் : 37**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023 விதி 392 (13) மற்றும் 393 ஆகியவற்றின் கீழ் ஒரு நாளைக்கு 100 கிலோ குப்பைகள் உருவாக்குபவர் அல்லது 5000 சதுர அடிக்கு மேல் உள்ள வணிக நிறுவனங்கள் அல்லது எந்த உரு வளாகமும் மொத்த கழிவு உருவாக்குபவர் (Bulk Waste Generator) ஆவார்கள். மேலும், வணிக அல்லது தொழில் அல்லது திருவிழா அல்லது பெரிய அளவில் மக்கள் கூடும் நோக்கங்களுக்காக அல்லது திருமண மண்டபம் அல்லது உணவகம் அல்லது தனியார் சிறிய மருத்துவமனை அல்லது மருத்துவமனைகளில் (உயிரி மருத்துவ கழிவுகள் தவிர) பயன்படுத்தப்படும் எந்தவொரு கட்டத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரிடமிருந்தும், அதில் உருவாக்கப்பட்ட கழிவுகளை அகற்றுவதற்காக ஒரு டன்னுக்கு ரூ.4000/- என்ற விகிதத்தில் பின்வரும் காரணிகளை கவனத்தில் கொண்டு சிறப்பு துப்புரவு கட்டணங்களை ஆணையாளர் விதிக்கலாம் மற்றும் வசூலிக்கலாம்.

(i) எந்தவொரு வளாகத்திலிருந்தும் அகற்றப்பட வேண்டிய குப்பை அல்லது திடக்கழிவின் தன்மை மற்றும் அளவு
(ii) அத்தகைய குப்பைகளை அகற்றுவதற்கு ஆகும் செலவு
(iii) அத்தகைய குப்பைகள் எடுத்துச்செல்லப்பட வேண்டிய இடத்தின் தூரம், மற்றும்
(iv) அத்தகைய குப்பைகள் அகற்றப்பட வேண்டிய காலமுறை இடைவெளி

மேற்கண்ட விபரப்படி தொகையினை நிர்ணயம் செய்திடவும், வசூல் செய்திடவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 20/2025/எச்1 )**

**பொருள் எண் : 38**

இந்நகர் மன்ற தீர்மான எண்.118 நாள்.19.07.2024 ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்-1 நாள்.10.03.2023 ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் 01. முதல் 05 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிக்கு 05.06.2024 அன்று முதல் ஓராண்டிற்கு M/s.அன்புமெஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது எதிர்வரும் 05.06.2025 அன்றுடன் ஓராண்டு காலம் முடிவடைகிறது. எனவே, பள்ளிமாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் M/s.அன்புமெஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு அதே விலைவிகிதத்தில் 05.06.2025 அன்று முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும், பள்ளி மாணவர்களுக்கு உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.25.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பள்ளி மாணவர்களின் நலன் கருதியும் M/s.அன்புமெஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் மூலம் 05.06.2025 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து அதே விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்னனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 991/2023/எச்1)**

**பொருள் எண் : 39**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் காணொலி காட்சி அறிவுரையில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் 01. முதல் 05 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிகள் நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் வகையில் தற்போது கூடுதலாக அரசு உதவி பெறும் பள்ளிகளில் 01 முதல் 5 வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கும் காலை உணவு வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட அரசு உதவி பெறும் பள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டேனிஷ் மிஷன் பள்ளி, கருணாபுரம் | 50 |
| 2 | டேனிஷ் மிஷன் பள்ளி, கச்சிராயபாளையம் ரோடு | 49 |
| 3 | ஆர்.சி.நடுநிலைப்பள்ளி,நேப்பால் தெரு | 73 |
| | மொத்தம் | 172 |

மேற்கண்ட பள்ளிகளில் மொத்தம் 172 பள்ளி மாணவர்களுக்கு தினசரி காலை உணவு திட்டத்தின் கீழ் காலை உணவு வழங்கும் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே இத்திட்டத்தினை நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் M/s,அன்புமெஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் மூலமாகவே மேற்கொள்ளவும், இப்பணிக்கு கூடுதலாக உணவு பரிமாறும் பணிக்கு 50 மாணவர்களுக்கு 1 நபர் வீதம் 3 நபர்கள் பணியமர்த்தி பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு கூடுதலாக ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 991/2023/எச்1)**

**பொருள் எண் : 40**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 21 வார்டுகள் உள்ளது. இந்நகராட்சி பகுதியில் 15840 எண்ணிக்கையிலான குடியிருப்புகளும், 2330 எண்ணிக்கையிலான வணிக நிறுவனம்/ கடைகளும் குடியிருப்புகளும் உள்ளது. இந்நகராட்சியானது சுமார் 63000 மக்கள் தொகை கொண்டது ஆகும். மேலும், இந்நகராட்சி பகுதியில் தினசரி சுமார் 20000 முதல் 25000 வரை பொதுமக்கள் வந்து செல்கின்றனர். இந்நகராட்சியானது மாவட்ட தலைநகரமாக உள்ள காரணத்தினால் சுற்றுப்புற கிராம மற்றும் வெளியூர்களிலிருந்து தினமும் 1000 கணக்கான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். மாண்புமிகு அமைச்சர் பெரு மக்கள், முக்கிய பிரமுகர்கள், முக்கிய அரசு உயர் அலுவலர்கள் அடிக்கடி இந்நகருக்கு வந்து செல்வதாலும், அரசு விழாக்கள் மற்றும் கோவில் திருவிழாக்கள் நடைபெறும் காரணமாக நகரின் தூய்மையை மேம்படுத்துவது அவசியமாக உள்ளது. பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் சுகாதாரக்கேடு ஏற்படாத வகையில் நகரில் உள்ள அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களையும் மழைநீர் வடிகாலையும், பொது இடங்களையும் (பேருந்து நிலையம், பூங்காக்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள்) ஆகியவற்றின் சுற்றியுள்ள பகுதிகளில் முறையாக பராமரிக்க வேண்டிய சூழல் உள்ளது.

நகரில் உள்ள தெருக்களின் நீளம் 108.836 கி.மீ, தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் 10.800, மழைநீர் வடிகால்களின் நீளம் 105.880 கி.மீ ஆகும். இந்நகராட்சி பகுதியில் தினசரி கேரமாகும் 18.96 மெ.டன் ஆகும். இதில் மக்கும் குப்பையின் எடை அளவு 12 மெ.டன், மக்காத குப்பையின் எடை அளவு 6.96 மெ.டன் ஆகும்.

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.101 ன் தெரிவிக்கப்பட்டுள்ள அரசு விதிமுறைகளின் படி இந்நகராட்சியில் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ளுவதற்கு 219 எண்ணிக்கை தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட நிரந்தர தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை 68 ஆகும். நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.33053/2022/EA2-SBM-18 நாள்.10.01.2023 ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை வெளிக்கொணர்வு ஒப்பந்த முறையில் மேற்கொள்வதற்கு M/s.கிரீன் வாரியர் திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு கடந்த 01.07.2023 அன்று முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி நிறுவனத்தார் மூலம் 130 எண்ணிக்கையிலான தூய்மைபணியாளர்களையும், 9 எண்ணிக்கையிலான ஓட்டுநர்களையும், 6 எண்ணிக்கையிலான துப்புரவு பணிமேற்பார்வையாளர்களையும் சேர்த்து மொத்தம் 145 பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி நிறுவனத்தார் ஒப்பந்த விதிமுறைகளின் படி குடியிருப்பு, வணிக பகுதிகளில் சேகரிக்கும் மக்காத குப்பைகளை நகராட்சிக்கு சொந்தமான துருகம் சாலையின் மயான பகுதியில் அமைந்துள்ள வளமீட்பு மையங்களில் கொண்டு செல்லப்படுகிறது.

தற்போதுள்ள நிலையில் போதிய எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேற்படி, உள்ள வளமீட்பு மையத்தில் தினசரி சேகரிக்கப்படும் சுமார் 6 மெ.டன் அளவுள்ள மக்காத குப்பைகளை தரம் பிரித்து முறையாக பண்டல் செய்து இறுதியாக்கம் செய்ய அரியலூர் டால்மியா சிமெண்ட் நிறுவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இப்பணிக்கு நகராட்சி வாகனத்தின் மூலம் அனுப்ப ஒரு நடைக்கு சுமார் 6 மெ.டன் கொள்ளவு மட்டுமே உள்ளதாலும், அரியலூர் சிமெண்ட் நிறுவனத்திற்கு கொண்டு செல்லும் தூரம் சுமார் 247 கி.மீ ஆகும். இதற்கு எரிபொருள் செலவினம் சுமார் 50 லிட்டர் முதல் 60 லிட்டர் மேற்கொள்ளப்படும் சூழ்நிலை உள்ளதாலும், நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 ன் படி 175,176, 177 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 ன் படி 391,392 ஆகியவற்றின் படி இந்நகராட்சி பகுதியில் மக்காத திடக்கழிவுகளை நவீன அறிவியல் முறையில் அகற்றுவதற்கும், மேற்படி வளமீட்பு மையத்தினை முறையாக பராமரித்திடவும், தனியார் சேவை நிறுவனத்தினை வெளிக்கொணர்வு ஒப்பந்த முறையில் தேர்வு செய்யவும், மேற்படி பணியினை 01.08.2025 முதல் 31.03.2026 வரையிலான 8 மாத காலங்களுக்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.55.00 (ரூபாய் ஐம்பத்தி ஐந்து இலட்சம் மட்டும்) லட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.334/2025/எச்1)**

**பொருள் எண் : 41**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.3088/2022/தூ.இ.தி–1 நாள்:–23.02.2023 ல் தெரிவிக்கப்பட்டுள்ள கடிதத்தில் நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்கும் குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரங்களை "செழிப்பு" என்ற விற்பனை பெயர் மூலம் விற்பனை செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி , இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை கொண்டு நகராட்சிக்கு சொந்தமான மூன்று நுண்உரமைங்களில் (1.துருகம் சாலை யூனிட் 1, 2.துருகம் சாலை யூனிட் 2, 3.நகராட்சி அலுவலக வளாகம் யூனிட் 3) இயற்கை உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி உரத்தினை ஒரு கிலோ ரூ.20/– விற்பனை செய்ய அரசு தெரிவித்துள்ளதன் படி விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ஆனால், நகராட்சிப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்கள் மேற்படி இயற்கை உரத்தினை கிலோ ரூ.20/–க்கு (ரூபாய் இருபது மட்டும்) வாங்குவதற்கு முன்வருவதில்லை. இதனால் நகராட்சியில் தயாரிக்கப்பட்டு சேமித்து வைக்கப்பட்டுள்ள இயற்கை உரங்கள் வீணாகும் நிலை உள்ளது. அதனை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் தற்போது இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி மூன்று நுண் உரமையங்களில் தயாரிக்கப்பட்டு இது நாள் வரை விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்ட இயற்கை உரத்திற்கும், அதற்கான அரசு நிர்ணயித்த தொகையினை நீக்கம் செய்யவும், இனிவரும் காலங்களில் பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் இலவசமாகவோ அல்லது கிலோ ஒன்றுக்கு ரூ.1.00 (ரூபாய் ஒன்று மட்டும்) என்ற மானிய விலையிலோ விற்பனை செய்வதற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது கடித்த்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒரு கிலோ கிராம் இயற்கை உரம் ரூ.20/–(ரூபாய் இருபது மட்டும்) என்ற விலைவிகிதத்தினை மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 504 /2023/எச்1)**

**பொருள் எண் : 42**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN38DE2588 (Road Sweeping Vehicle) சாலை பெருக்கும் வாகனத்திற்கு அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்வதற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேலும், இவ்வாகனம் தொழில் நுட்பங்களுடன் கூடிய சிறப்பு வாகனம் என்பதால் வாகனத்தில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய வாகனத்தினை கொள்முதல் செய்யப்பட்ட M/s.Roots Multiclean Limited. கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் மூலமாக ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு விலைப்புள்ளி எண்.AMC 046864 நாள்.28.04.2025

1. The AMC does not cover the cost of Parts to be replaced or Cost of Parts to be repaired and consumables will be wholly and completely borne by the customer and is outside the scope of this contract.
2. The Service will be rendered at the site specified in AMC Contract
3. RMCL reserves the right to recall the machine to its branch service centre for detailed and major maintenance works if required. This decision will be taken in the best of judgement by RMCL

4. The Customer shall be responsible for providing proper power service. To make available the machine under contract during service visit.
5. This agreement does not give rise to any liability or obligation to RMCL and the successful application, operation and the management of the equipment shall be the responsibility of the customer only
6. This agreement covers only the Maintenance problems arising out of normal functioning of the machine and does not cover the service of breakdown arising out of misuse of the machine or its use under environmental conditions not prescribed by RMCL, due to shifting/ transporting of the machine from original place of installation or due to faulty functioning of other system / subsystem which has been interfaced with the equipment specified in this contract.
7. On termination of this contract, RMCL obligations under this agreement cease in its entirely. The customer may enter into a fresh contract with RMCL if RMCL satisfies itself that the machine is in a maintainable state. All costs of inspection, time and material to bring the machine to a maintainable state will be charged by RMCL to the customer.
8. Validity: The rates and terms are valid for 30 days from the date of this order.

மேற்கண்ட விபரப்படி ஒரு வருடத்திற்கான பராமரிப்பு கட்டணம் ரூ.135700/- தொகை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்படி வாகன்த்திற்கு ஒரு வருட காலத்திற்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கிடவும், மேற்படி தொகையினை நகராட்சி வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.515/2025/H1-1)

**பொருள் எண் : 43**

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN32AV1335 என்ற கழிவுநீர் உறிஞ்சும் வாகனத்தின் மூலமாக நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் நகராட்சி பள்ளிக்கூடங்களில் உள்ள கழிப்பிடங்களில் சேகரமாகும் மலக்கழிவுகளை முறையாகவும், பாதுகாப்பாகவும் அப்புறப்படுத்த மேற்கண்ட வாகனத்தினை பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாகனத்தில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாக்கும் உபகரணங்களான முழு உடல் கவசம், பிராண வாயு உருளை, முககவசம், பேட்டரி விளக்கு, விஷ வாயு பரிசோதனை கருவி, ஒளிரும் மேல் சட்டை, கையுறை (முழுங்கை வரை அணிவது), கூம்பு வடிவிலான ஒளிரும் பட்டை ஆகியவை போதிய அளவில் இல்லாத காரணத்தினால், பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டும், பணியின் அவசர அவசியம் கருதியும் தேவையான அளவிற்கு மேற்படி பாதுகாப்பு உபகரணங்களை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) லட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : /2025/எச்1)**

**பொருள் எண் : 44**

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ6/203/2025 நாள்.08.04.2025 ல் தெரிவிக்கப்பட்டுள்ள உத்தரவில் கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கத்தின் மூலமாக ஒவ்வொரு பிரதி மாதமும் 2 வது மற்றும் 4 வது சனிக்கிழமைகளில் பொதுமக்களுக்கு ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் தடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. அவ்வாறு நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு ரூ.10000/− வீதம் இந்நகராட்சிக்கு தொகைரூ.23500/− பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட விபரப்படி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தவும், அதற்கான செலவினம் மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிடவும், பிறகு செலவின பட்டியலின் விபரத்தினை மாவட்ட ஆட்சியர் கள்ளக்குறிச்சி அவர்களுக்கு சமர்ப்பித்து அனுமதிக்கப்பட்ட செலவினத்தொகையான ரூ.23500/− யை பெற்று நகராட்சி வருவாய் நிதிக்கு ஈடு செய்திடவும் மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :−**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1422/2022/எச்1 )**

**பொருள் எண் : 45**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களால் கடந்த 26.06.2025 அன்று நடைப்பெற்ற காணொலி காட்சி மூலம் டெங்கு நோய் தடுப்பு குறித்த ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தற்போது தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதால் டெங்கு நோய் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. ஆகையால் டெங்கு நோய் கட்டுப்படுத்த கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு தினசரி நிலவேம்பு குடிநீர் மற்றும் கபசுர குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக தேவையான நிலவேம்பு சூரணம் மற்றும் கபசுர சூரணம் ஆகியவற்றை கொள்முதல் செய்யவும், மேற்படி நிலவேம்பு குடிநீரை பொதுமக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் வழங்க கொண்டு செல்வதற்கு தேவையான சில்வர் புட்டிகள் (டிரம்கள்) மற்றும் சில்வர் டம்ளர் ஆகியவற்றை கொள்முதல் செய்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ஓராண்டிற்கு ரூ.6.00 (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) லட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:−**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : / 2025 / எச்1)**

**பொருள் எண் : 46**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 வரை உள்ள பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான 26 சமுதாய கழிப்பிடங்கள், அறிவு சார் மையம் மற்றும் பூங்காக்களில் உள்ள கழிவறைகளை தினசரி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், இந்நகராட்சியில் தற்போது குறைந்த எண்ணிக்கையிலான 21 தூய்மை பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி பணியாளர்கள் அன்றாட பணிகளான மழைநீர் வடிகால் தூர்வாருதல், பேருந்து நிலையம் பராமரித்தல், MCC பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆகையால் இப்பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதில் மிகவும் சிரமம் ஏற்படுவதால் பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. மேலும், நகரின் அவ்வப்போது ODF+ மற்றும் Garbage Free Cities குப்பையில்லா நகரத்திற்கான மதிப்பெண் வழங்குவதற்காக நேரடி ஆய்வு செய்யப்படுகிறது. இதனால் நகராட்சி பகுதியினை முறையாகவும், தூய்மையாகவும் பராமரிக்க வேண்டும். அதன்படி கீழ்க்கண்ட விபரப்படி பயன்பாட்டில் உள்ள கழிவறைகளின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வார்டு எண் | கழிவறையின் விபரம் |
|---|---|---|
| 1 | 1 | நகராட்சி தூய்மை பணியாளர்களின் குடியிருப்பு |
| 2 | 5 | ராஜா நகர் பூங்கா |
| 3 | 6 | வாய்க்கால் மேட்டு தெரு |
| 4 | 8 | சிறுவங்கூர் ரோடு |
| 5 | 9 | திருவரங்கம் நகர் |
| 6 | 10 | MCC துருகம் சாலை |
| 7 | 10 | அறிவுசார் மையம் |
| 8 | 12 | சித்தேரி ஏரிக்கரை |
| 9 | 12 | சித்தேரி தெரு |
| 10 | 16 | சிதம்பரம் பிள்ளை தெரு |
| 11 | 19 | கரியப்பா நகர் |
| 12 | 19 | J.J.நகர் |
| 13 | 20 | ஏமப்பேர் பூங்கா |
| 14 | -- | மூன்று சிறுநீர் கழிப்பிடங்கள் |

எனவே, பொதுமக்களின் நலன் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் தற்போது பயன்பாட்டில் உள்ள கீழ்க்கண்ட விபரப்படி சமுதாய கழிவறைகள் , அறிவுசார் மையம் மற்றும் பூங்காக்களில் உள்ள கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் சேவை நிறுவனத்தினை தேர்வு செய்து அந்நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி பணிகளை 01.08.2025 முதல் 31.03.2026 வரை 8 மாதக்காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2025 / எச்1)**

**பொருள் எண் : 47**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 வரை உள்ள பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட விபரப்படி நகராட்சி தொடக்கப்பள்ளிகள் 8 , நடுநிலைப்பள்ளிகள் 2 , அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி என ஆக மொத்தம் 14 பள்ளிக்கூடங்களில் உள்ள அனைத்து சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் கழிவறைகளை தினசரி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், இந்நகராட்சியில் 21 தூய்மை பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி பணியாளர்களுக்கு அன்றாட பணிகளான மழைநீர் வடிகால் தூர்வாருதல், பேருந்து நிலையம் பராமரித்தல், MCC பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆகையால் இப்பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. மேலும், கீழ்க்கண்ட பள்ளிக்கூடங்களில் உள்ள கழிவறையினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள விபரம் பின்வருமாறு

| வ.எண் | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1 | MUNICIPAL PRIMARY SCHOOL EMAPPAIR |
| 2 | MUNICIPAL PRIMARY SCHOOL EMAPPAIR COLONY |
| 3 | MUNICIPAL PRIMARY SCHOOL (GIRLS) KALLAKURICHI |
| 4 | MUNICIPAL PRIMARY SCHOOL MUSLIM GIRLS KALLAKURICHI |
| 5 | MUNICIPAL PRIMARY SCHOOL MUSLIM BOYS KALLAKURICHI |
| 6 | MUNICIPAL MIDDLE SCHOOL EAST KALLAKURICHI |
| 7 | MUNICIPAL PRIMARY SCHOOL (WEST) KALLAKURICHI |
| 8 | MUNICIPAL PRIMARY SCHOOL KESAVALU NAGAR |
| 9 | MUNICIPAL PRIMARY SCHOOL KOTTAIMEDU |
| 10 | MUNICIPAL MIDDLE SCHOOL MANIKOONDU STREET |
| 11 | GOVT.HIGHER SECONDARY SCHOOL, EMAPPER |
| 12 | GOVT.BOYS HIGHER SECONDARY SCHOOL, KALLAKURICHI |
| 13 | GOVT.GIRLS HIGHER SECONDARY SCHOOL, KALLAKURICHI |
| 14 | GOVT.GIRLS MODEL HIGHER SECONDARY SCHOOL, NEPPAL STREET |

எனவே, பள்ளி மாணவ, மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட அனைத்து நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் அரசு பள்ளி வளாகங்களில் உள்ள கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் தனியார் சேவை நிறுவனத்தினை தேர்வு செய்து அந்நிறுவனத்தின் மூலம் மேற்படி பணிகளை 01.08.2025 முதல் 31.03.2026 வரை 8 மாதக்காலத்திற்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சத்தினை நகராட்சி வருவாய் நிதி மற்றும் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதி மற்றும் கல்வி நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2025/எச்1)**

**பொருள் எண் : 48**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வரும் வாகனங்களான இலகுரக வாகனங்கள் (LCV). லாரி, மின்கல வாகனங்கள் (BOV). ஆகிய வாகனங்கள் மற்றும் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்படும் தெருமின் விளக்கு பராமரிப்பு வாகனங்களின் இயக்கங்களை கண்காணிக்க ஏதுவாக GPS கருவி பொருத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. அதன்படி வாகனத்தின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வாகன எண் | வாகன விபரம் |
|---|---|---|
| 1 | **TN15P3133** | LCV |
| 2 | **TN15P3121** | LCV |
| 3 | **TN15P3168** | LCV |
| 4 | **TN15S7421** | LCV |
| 5 | **TN15S7454** | LCV |
| 6 | **TN15ME4936** | LCV |
| 7 | **TN32AV0552** | LORRY |
| 8 | **TN15ME4951** | LCV |
| 9 | **TN15W0158** | STREET LIGHT |
| 10 | **TN32AU1335** | SULLEGE LORRY |
| 11 | **TN20DF5944** | LCV |
| 12 | **TN20DF5910** | LCV |
| 13 | **TN20DF5938** | LCV |
| 14 | **BOV** | 20 Nos |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வ.எண் 1 முதல் 14 வரையிலும் உள்ள 33 வாகனங்களுக்கு GPS கருவி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50(ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) லட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்கண்ட அட்டவணையில் வ.எண்.1 முதல் 5 , வ.எண்.11 முதல் 13 வரை உள்ள வாகனங்கள் மற்றும் மின்கலஊர்தி (BOV) 20 எண்ணிக்கையிலும் உள்ள வாகனங்களுக்கு GPS கருவி பொருத்தப்பட்டத்திற்கான செலவின தொகையினை M/s,கிரீன் வாரியர் திருவள்ளூர் என்ற நிறுவனத்தினரின் மாதாந்திர பட்டியலில் பிடித்தம் செய்து ஈடு செய்திடவும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 515/2025/எச்1)**

**பொருள் எண் : 49**

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் TN15 MF1101 JCB என்ற வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், முன் பக்கெட் பல்கள், பின் பக்கெட் பல்கள், வெல்டிங் ஒர்க் மற்றும் இதர பழுதுகள் செய்யும் பணிக்கு, பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 18.06.2025 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | **M/s. கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ் கள்ளக்குறிச்சி** | **92600.00** |
| 2 | M/s.ஸ்ரீவெங்கடேஸ்வரா லேபர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி | 94700.00 |
| 3 | M/s.ஸ்ரீவெங்கடஜலபதி லேபர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி | 96250.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை** ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசியத்தை கருதியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 515/2025/எச்1-1)**

**பொருள் எண் : 50**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19-ல் காளி கோயில் செல்லும் பகுதியில் உள்ள சிறுபாலம் மற்றும் வார்டு எண்.20-ஏமப்பேர் குளத்துக்கு செல்லும் வழியில் முகப்பு பகுதியில் உள்ள சிறுபாலம் ஆகிய சிறுபாலங்கள் பழுது ஏற்பட்டு மழைநீர் வடிகாலில் நீர் செல்லலாமலும், பொதுமக்களால் ஏற்படுத்தப்படும் கழிவுநீர் மழைநீர் வடிகாலில் தேங்கி நிரம்பி சாலையில் செல்கிறது, இதனால் சாலை பழுது ஏற்படுவதோடு பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளது.

எனவே, மேற்படி பழுதடைந்த சிறுபாலங்களை அகற்றிவிட்டு புதியதாக அமைத்து தர வேண்டி வார்டு எண்.19 மற்றும் வார்டு எண்.20 ஆகிய நகர்மன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளார்.

அதனடிப்படையில் மேற்படி பகுதிகளை நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் அப்பகுதியில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து கழிவுநீர் செல்லாமல் தேங்கி பொதுமக்கள் பாதிப்பு ஏற்படுத்தும் நிலையில் உள்ளது. எனவே, பழுதடைந்த சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதியதாக அமைத்துதந்தால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பயன் உள்ளதாகவும், சுகாதார பாதிப்பு ஏற்படாத வண்ணம் தடுக்கலாம், எனவே, அப்பகுதியில் பழுதடைந்த சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலம் அமைத்து தர வேண்டியது மிகவும் அவசிய தேவையாக உள்ளது.

எனவே, மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண்.1016 / 2025 / இ1)**

**பொருள் எண் : 51**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.05–ல் உள்ள ராஜா நகர் பகுதியில் செயல்பட்டு வரும் நகராட்சி பூங்காவில் பொதுமக்கள் தினசரி காலை மற்றும் மாலை நேரங்களில் நடைப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர், தற்போது அப்பூங்காவில் உள்ள நடைப்பாதை சேதமடைந்தும், இரவு நேரங்களின் மின்விளக்குகள் இன்றியும் உள்ளது.

எனவே, பழுதடைந்த நடைப்பாதை, மின்விளக்குகள் அமைத்தல் மற்றும் இதர பழுதுநீக்க பணிகள் செய்து தர வேண்டி 05–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், அவர்கள் கோரியுள்ளார். மேற்படி பகுதியில் உள்ள பூங்காவை நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் நடைப்பாதை பழுதடைந்தும் மின் விளக்குகள் பழுதடைந்தும் இருந்தது, ஆகையால் மேற்படி பழுதடைந்த நடைப்பாதை மற்றும் மின்விளக்கு ஆகியவற்றை சீரமைப்பு செய்தல் மற்றும் பூங்காவில் உள்ள இதர பழுதுகளை நீக்கம் செய்தால் இப்பூங்காவில் உள்ள பொதுமக்களுக்கு பயன் உள்ளதாக அமையும் என்பதால் மேற்படி பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே, மேற்படி பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண்.1017 / 2025 / இ1)**

**பொருள் எண் : 52**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட மணிகூண்டு தெருவில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியின் முன்புறம் உள்ள சுற்று சுவர் பழுதடைந்தும், நுழைவு வாயில் கேட் உடைந்தும் உள்ளது. இதனால் பள்ளி மாணவர்களுக்கும், பள்ளிக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. எனவே, மேற்படி பழுதடைந்த சுற்று சுவர் மற்றும் கேட்டை சீரமைத்து தர வேண்டி 11–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்.

எனவே, மேற்படி பகுதியில் உள்ள நகராட்சி ஆரம்ப பள்ளியை நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் பள்ளியின் முன்புறம் உள்ள சுற்றுசுவர் மற்றும் நுழைவு வாயில் கேட் ஆகியவை பழுதடைந்து இருந்தது, ஆகையால் மேற்படி பழுதடைந்த சுற்று சுவர் மற்றும் நுழைவு வாயில் கேட் ஆகியவற்றை சீரமைப்பு செய்தல் மாணவர்களுக்கும், பள்ளிக்கும் பாதுகாப்பாகவும், பயன் உள்ளதாக அமையும் என்பதால் மேற்படி பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே, மேற்படி பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.1,75,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஏழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 0973 / 2025 / இ1)**

**பொருள் எண் : 53**

**வேலையின் பெயர்** :- கள்ளக்குறிச்சி நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகன எண்.TN32AV0727 (JCB) என்ற வாகனத்திற்கு முன் பக்கம் (9.00.16) மற்றும் பின் பக்கம் டயர்கள் (16.9.28) பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 22.07.2025 ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | முன்பக்க டயர் (9.00.16) 2க்கு ரூ. | பின்பக்க டயர் (16.9.28) 2க்கு ரூ. | லேபர் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | பாத்திமா டயர் வேர்ல்டு, கள்ளக்குறிச்சி | 25700.00 | 65700.00 | 2000.00 |
| 2 | ஏ.ஆர்.எஸ்.டயர் சென்டர், சங்கராபுரம் | 26000.00 | 66000.00 | 3000.00 |
| 3 | ஆராபா டயர்ஸ், தியாகதுருகம் | 26500.00 | 66500.00 | 3200.00 |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் குறைந்த விலைப்புள்ளிகள் அளித்துள்ள M/s.பாத்திமா டயர் வேர்ல்டு, கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.515 /2025/எச்1-1)

**பொருள் எண் : 54**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.3031/2024/அ3 நாள்.19.03.2025 ல் தெரிவிக்கப்பட்டதில் நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு தூய்மை இந்தியா திட்டம், மரம் வளர்ப்பு, டெங்கு விழிப்புணர்வு, மழைநீர் சேகரிப்பு, வீட்டுக்கு ஒரு கழிப்பறை, பிளாஸ்டிக் ஒழிப்பு, எனது குப்பை எனது பொறுப்பு, மக்கும் குப்பை மக்காத குப்பை தரம் பிரித்தல் குறித்த விழிப்புணர்வு, திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் குடிநீர் சிக்கனம் ஆகியவற்றின் அவசியத்தை குறித்த விழிப்புணர்வு பொதுமக்கள் மனதில் மனமாற்றம் ஏற்படுத்தும் வகையில் திருநங்கை V.N.ராணி, சிவசக்தி கிராமிய கலைக்குழு, விருத்தாச்சலம் என்ற கலைக்குழுவின் மூலம் கலைநிகழ்ச்சி நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண்.01 முதல் 21 வரை உள்ள பகுதியில் மேற்கண்ட கலைக்குழுவின் மூலமாக பொதுமக்கள் நன்கு அறியும் வகையில் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி ஒரு நாளைக்கு 5 நிகழ்ச்சி நடத்துவதற்கு ரூ.25000/- செலவினம் ஆகும். எனவே, இந்நகராட்சி பகுதியில் 23.07.2025 முதல் 26.07.2025 வரை 4 நாட்களுக்கு ஆகும் செலவினம் ரூ.1.00 (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) லட்சத்திற்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசியத்தை கருதியும் திருநங்கை V.N.ராணி சிவசக்தி கிராமிய கலைக்குழு, விருத்தாசலம் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றதலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 515/2025/எச்1-13)**

**பொருள் எண் : 55**

அரசாணை எண். 228 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை நாள்.13.11.2008 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20543/2021/பி1 நாள்.26.07.2024 ல் நகராட்சி பகுதியில் நவீன எரிவாயு தகனமேடையினை தனியார் அறக்கட்டளையின் மூலமாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தால் நிபந்தனைகளுக்குட்பட்டு உரிய அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் ஏமப்பேர் VAS திருமண மண்டபம் பின்புறம் புதியதாக அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடையினை தனியார் அறக்கட்டளை மூலமாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள M/s.மோக்ஷா டிவாரா (M/s.MOKSHA DWARA) சென்னை என்ற அறக்கட்டளையின் சம்மதம் கடிதம் அளித்துள்ளார். எனவே, மேற்படி நவீன எரிவாயு தகனமேடையின் பராமரிப்பு பணிகள் கீழ்காணும் நிபந்தனையின் படி ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ள மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. பொறுப்பேற்ற நாளிலிருந்து ஓர் ஆண்டு காலத்திற்கு மட்டுமே நவீன எரிவாயு தகன மேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும். மேலும், கால நீட்டிப்பு தேவைப்படின் மூன்று மாத காலத்திற்கு முன்பாகவே ஆணையாளருக்கு விண்ணப்பிக்கப்பட வேண்டும்.
2. பராமரிப்பு அனுமதி விண்ணப்பத்தை புதுப்பித்து வழங்கவோ அல்லது நிராகரிப்பு செய்யவோ ஆணையாளர் முடிவே இறுதியானது. அனுமதி மறுக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட தனியார் அறக்கட்டளை நிறுவனம் தாங்கள் நிறுவிய அனைத்து சுடுதல்/ கட்டிடங்களுக்கு எவ்வித இழப்பீடும் கோராமல் கள்ளக்குறிச்சி நகராட்சி வசம் ஒப்படைக்க அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும்.
3. அறக்கட்டளை நிறுவனம் பராமரிப்பு பணியினை நிறுத்தி கொள்ள விரும்பினால் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு மூன்று மாத காலத்திற்கு முன்பு அறிவிப்பு கடிதம் முறையாக வழங்க வேண்டும்.
4. பராமரிப்பு செய்ய ஒப்படைக்கப்பட்ட இடத்தில் சுடுதல் கட்டுமானம் ஏதேனும் தேவைபடின் ஆணையரின் அனுமதி பெற்ற பின்பு வேலைகள் செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிந்த பிறது திரும்ப ஒப்படைக்கும் போது எவ்வித இழப்பீடும் வழங்கப்பட மாட்டாது.
5. மேற்படி நவீன தகன எரிவாயு மேடை பகுதியில் காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த காரியங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடாது. எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்கக்கூடாது.
6. நவீன எரிவாயு தகன மேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு தேவையான நிர்வாக நடைமுறைகளையும், விதிமுறைகளையும் அறக்கட்டளை நிறுவனம் வகுத்துக் கொண்டு ஆணையாளருக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற வேண்டும். மேலும், அவ்வப்போது நகராட்சி ஆணையாளர் மூலம் வழங்கப்படும் ஆலோசனைகளை அறக்கட்டளை நிறுவனம் ஏற்று செயல்பட வேண்டும்.
7. மேற்படி நவீன தகன எரிவாயு மேடை இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது சமூக விரோதிகளால் எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு நகராட்சி பொறுப்பேற்க இயலாது பராமரிப்பு நிறுவனமே முழுப்பொறுப்பாகும். விதிகளுக்கு உட்பட்டு நகரமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு ஒத்துழைப்போ அல்லது உதவியோ நல்கலாம்.

8. நவீன எரிவாயு தகனமேடை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணத்தை நகர மன்ற தலைவர், ஆணையாளர், சுகாதார அலுவலர் மற்றும் அறக்கட்டளை நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம். இக்கட்டணம் லாப நோக்கம் இன்றி செலவுகளை சரிக்கட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு கூடுதலாக தொகை வசூலிக்கக்கூடாது. மேலும், நவீன எரிவாயு தகனமேடை பயன்படுத்துவோர் செலுத்தும் கட்டணத்திற்கு உரிய ரசீதினை முறையாக அறக்கட்டளை நிறுவனம் அளிக்க வேண்டும். அச்சடிக்கப்படும் இரசீது புத்தகத்தின் அளவு மற்றும் எண்ணிக்கை விவரத்தினை நகராட்சி அலுவலகத்தில் தெரிவித்து ஆணையரின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். பிரதிமாதம் 15 தேதிக்குள் தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும்.

9. வசூலிக்கப்படும் கட்டண தொகையில் இருந்து நவீன எரிவாயு தகனமேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கு உண்டாகும் செலவினங்களான எரிவாயுக்கான மூலப்பொருள்கள் கொள்முதல் செய்தல், பணியாளர் சம்பளம், மின் கட்டணம், குடிநீர் கட்டணம், தோட்டம் பராமரித்தல், காவல், தூய்மை சுகாதாரச்செலவுகள் ஆகியவற்றை அறக்கட்டளை சரி செய்து கொள்ள வேண்டும்.

10. தகனமேடை கட்டணம் ரூ.3500/- செலவினங்கள் கூடுதலாகும் பட்சத்தில் கள்ளக்குறிச்சி நகராட்சியும், அறக்கட்டளை நிறுவனமும் சேர்ந்த தீர்மானித்து நகர மன்றத்தின் ஒப்புதல் பெற்று மேற்படி கட்டணத்தை மறு நிர்ணயம் செய்து வசூலிக்க அனுமதிக்கலாம்.

11. எரியூட்டும் இயந்திர புகைப்போக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின் படி பராமரிக்கப்பட வேண்டும்.

12. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி தேவைப்படுமென கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லாச் சான்று பெறுவதற்கான கட்டணம் நகராட்சியால் செலுத்தப்படும். தவிர தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அறக்கட்டளை நிறுவனம் மேற்கொள்ள வேண்டும்.

13. ஜாதி, மதம், இனம் வேறுபாடு இன்றி அரசியல் கட்சிகள் அரசியல்வாதிகள் தலையீடு, குறுக்கீடு இன்றி ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வுவின்றி சமுதாயத்தில் அனைவரும் சம விகிதத்தில் பயன்பெறும் வகையில் பொதுவானதாக நவீன எரிவாயு மயானமாக பயன்படுத்தப்பட வேண்டும். பராமரிக்கப்பட வேண்டும்.

14. எரிவாயு மயானத்தில் அறக்கட்டளை நிறுவனம் எந்தவித கூரை வேய்ந்த கட்டிடம் அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூறையோ கண்டிப்பாக அமைக்கப்பட கூடாது.

15. எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்ட பிரச்சனைகளுக்கு அறக்கட்டளையே முழு பொறுப்பேற்க வேண்டும்.

16. அறக்கட்டளை நிறுவனம் இறந்தவரின் பெயர், வயது, தகப்பனார், தாயார், கணவர் பெயர், முகவரி, எரிவாயு மயானத்தில் எரிவூட்டப்பட்ட நாள், நேரம், பெறப்பட்ட தொகை முதலிய விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும். மேற்படி பதிவேட்டினை நகராட்சி பிறப்பு இறப்பு பதிவாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளரிடம் பிரதிமாதம் 15 ம் தேதிக்குள் சமர்பித்து சரிபார்த்தல் சான்று பெற வேண்டும்.

17. மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து நகராட்சியும், அறக்கட்டளை நிறுவனமும் சேர்ந்து ஏற்படுத்திய ஒப்பந்தம் இந்த ஒப்பந்தத்திற்கான 2 நபரால் 1வது நபருக்கு எவ்வித இழப்பு தொகையும் செலுத்தப்படவில்லை.

18. தகனம் செய்யும் ஒவ்வொரு சடலத்திற்கும் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு பங்கு தொகையாக சடலம் ஒன்றுக்கு ரூபாய் 100/– வீதம் கள்ளக்குறிச்சி நகராட்சி கருவூலத்தில் பிரதி மாதம் 10 ம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட அறக்கட்டளையால் செலுத்தப்பட வேண்டும்.
19. நவீன எரிவாயு தகன மேடை பகுதியில் சிசிடிவி கண்காணிப்பு கேமரா அறக்கட்டளையின் செலவில் பொருத்தி பராமரிக்க வேண்டும். பிரதி மாதம் 15 ம் தேதிக்குள் கண்காணிப்பு கேமரா பதிவுகளை நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
20. அரசு, நகர்மன்றம் மற்றும் ஆணையாளர் அவர்களால் அவ்வப்போது அறிவுறுத்தப்படும் நிபந்தனைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.
21. மேற்கண்ட அனைத்து நிபந்தனைகளையும் சம்மதித்து நகராட்சிக்கு அறக்கட்டளை நிறுவனம் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.862/2025/எச்1)

**பொருள் எண் : 56**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21–வார்டுகளில் பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தெரு மின் விளக்குகளை மாநில உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (SUIDF) கடன் திட்டத்தில் ரூ.389.66 இலத்சத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 2279 தெருமின் விளக்குகளை LED தெரு மின் விளக்குகளாக மாற்றியமைத்து பத்தாண்டுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு M/s HARIWAY LINES, புதுக்கோட்டை என்ற நிறுவனத்திற்கு 20.02.2023–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் 2279 எண்ணிக்கையிலான தெருமின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றியமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயம் செய்யப்பட்ட கால அளவு முடிவடைந்துள்ளது, மேலும், அனைத்து தெரு விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றியமைக்கும் பணி முடிவடைந்து மாதாந்திர இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி LED விளக்குகளாக மாற்றியமைக்கும் பணி நாளாது தேதி வரை முழுமையாக முடிக்கப்படவில்லை.

மேலும் நகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட தெருக்கள் மற்றும் புதிய குடியிருப்புக்கள் ஆகிய பகுதியில் புதிய தெருமின் விளக்குகள் அமைக்கும் பணி 15வது நிதிக்குழு மான்ய நிதியில் 864 எண்ணிக்கை LED தெருமின் விளக்குகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருவதால் போதிய மின்பணியாளர்கள் இல்லாத நிலையில் உள்ளது.

எனவே, பொதுமக்களின் பாதுகாப்பு நலன் மற்றும் தெருமின் விளக்கு பணியின் அவசியத்தை கருதி இப்பணியை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் தெருமின் விளக்குகளை ஆன்/ஆப் செய்தல் மற்றும் பழுது ஏற்படும் தெருமின் விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணிகளை கல்லை ஆடவர் சுய உதவி குழுவின் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் 2024–2025ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கல்லை ஆடவர் சுய உதவி குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.028, நாள்.07.02.2025ல் அனுமதி வழங்கப்பட்டது தற்போது முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் M/s HARIWAY LINES, புதுக்கோட்டை நிறுவனம் அனைத்து தெருமின் விளக்குகளையும் LED மின் விளக்குகளாக மாற்றியமைத்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி தொடங்கப்படாத நிலையில் ஏற்கனவே உள்ள தெருமின் விளக்குகளை ஆன்/ஆப் செய்தல் மற்றும் பழுது ஏற்படும் தெருமின் விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள இப்பணியை ஏற்கனவே செய்து வரும் கல்லை ஆடவர் சுய உதவிகுழு மூலம் மேலும் ஆறு மாத காலத்திற்கு (01.08.2025 முதல் 31.12.2025 வரை) மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.8.00 இலட்சம் (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருமின் விளக்குகளை ஆன்/ஆப் செய்தல் மற்றும் பழுது ஏற்படும் தெருமின் விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணியினை செய்து வரும் கல்லை ஆடவர் சுய உதவிகுழு மூலம் மேலும் ஆறு மாத காலத்திற்கு (01.08.2025 முதல் 31.12.2025 வரை) மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் 2025-2026ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 645 / 2023 / இ1)**

## பொருள் எண் : 57

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான மந்தைவெளியில் பொது கூட்ட மேடை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் புரணமைப்பு செய்யப்பட்டு பொது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பொது கூட்ட மேடையில் அனைத்து கட்சியின் சார்பாக பொது கூட்ட மேடை பயன்படுத்தப்பட்டு வருவதால் மேற்படி பயன்பாட்டிற்கு வாடகை தொகை மின்சார கட்டணம், தூய்மைக்கட்டணம் (கிளினிங் சார்ஜ்) உட்பட கூட்டம் ஒன்றுக்கு ரூ.5000/-வீதம் கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்          /2025/ ஆ2

**பொருள் எண் : 58**

தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர், அவர்களின் மாதாந்திர காணொளி காட்சி ஆய்வு கூட்டத்தில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் உள்ளடக்கிய அனைத்து பகுதிகளில் உள்ள சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்கள் மற்றும் பழுதுகள் நீக்கம் செய்ய அறிவுத்தப்பட்டது. அதனடிப்படியில் நடைபெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் சென்னை–28 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்கள் வேலூர்–12 ஆகியோரின் காணொளி காட்சி ஆய்வு கூட்டத்திலும் தலைமை செயலாளர், அவர்களின் அறிவுறுத்தலின் படி நகராட்சி பகுதியில் உள்ள சாலைகளில் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் உள்ள தார் மற்றும் சிமெண்ட் சாலைகளை கள ஆய்வு செய்து சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்கள் மற்றும் பழுதுகள் ஆகியவை கணக்கீடு செய்யப்பட்டது. எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளில் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசிய தேவையாக உள்ளது.

எனவே, மேற்படி பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 1281 / 2025 / இ1)**

**பொருள் எண் : 59**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண். 20–ல் அக்ரஹார தெருவில் உள்ள நூலகத்தில் தினம் தோரும் ஏராளமான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வருகை நாளுக்கு நாள் அதிக்கரிக்கிறது. எனவே, நூலகத்தில் வருகை தரும் வாசகர்களுக்கு போதிய அளவிளான இடம் இல்லாத காரணத்ததால் வாசகர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டு அசோகரிய சூழல் ஏற்படுகிறது.

எனவே, மேற்படி நூலகத்தில் வாசகர்களின் வருகைக்கு ஏற்ப இடம் வசதி ஏற்படுத்தி தர வேண்டி 20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர், மற்றும் 21–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் நேராய்வு செய்யப்பட்டதில் அந்நூலகத்தில் கூடுதல் கட்டட வசதி அமைக்க போதுமான இடவசதி இல்லாத காரணத்தால் தற்போது செயல்பட்டு வரும் நூலக கட்டடத்தின் மேல் தளத்தில் இரும்பு ஷெட்டு அமைத்து இட வசதி அமைத்து தர அறிவுறுத்தினர்.

எனவே, மேற்படி ஏற்கனவே உள்ள நூலக கட்டடத்தின் மேல் தளத்தில் இரும்பு ஷெட்டு அமைத்து மாணவர்கள் உணவு அருந்தும் வகையில் வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். / 2025 / இ1)**

**பொருள் எண் : 60**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022–ன் கீழ் கள்ளக்குறிச்சி நகராட்சி சுந்தரவிநாயகர் கோவில் தெரு சீத்தாரம் நகர் பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பட்டில் இருந்து வருகிறது. இந்நூலகத்திற்கு தினமும் 100–க்கும் மேற்பட்ட மாணவ / மாணவிகள், கல்லூரி மாணவர்கள், போட்டி தேர்வுக்கு தயாராகும் போட்டி தேர்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானவர்கள் தினமும் பயன் பெற்று வருகின்றனர்.

மேலும், இந்நூலகத்திற்கு வரும் மாணவர்களுக்கு மதிய உணவு அருந்தும் வகையில் போதிய இடம் இல்லாத காரணத்தால் வெளிப்பகுதியில் உணவு அருந்தி வருவதால் அவர்களுக்கு அசோகரிய சூழல் ஏற்படுவதோடு, கற்றல் திறன் பாதிக்கப்படுகிறது.

எனவே, மேற்படி நூலக வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் உணவு அருந்தும் கூடம் அமைத்து தர வேண்டி நூலகத்தில் பயில வரும் மாணவர்களின் கோரிக்கை அடிப்படையில் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர், ஆகியோர் நேராய்வு செய்யப்பட்டதில் நூலக வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் இரும்பு ஷெட்டு அமைத்து மாணவர்கள் உணவு அருந்தும் வகையில் வசதிகள் அமைத்து தர அறிவுறுத்தினர்.

எனவே, மேற்படி நூலகத்தில் காலியாக உள்ள இடத்தில் இரும்பு ஷெட்டு அமைத்து மாணவர்கள் உணவு அருந்தும் வகையில் வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.5,00,000/–(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். / 2025 / இ1)**

நகர் மன்ற தலைவர்

**கள்ளக்குறிச்சி நகராட்சி**